Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/848)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 04 ஞாயிற்றுக்கிழமை (21.08.2011) பக்கங்கள் 16 ஓசை – 326


மேற்குலகின் இரட்டை வேடம்
08


"செஞ்சொல் வேந்தன்" கௌரவம்
09


இந்தியாவை குலைக்கும் சீனா...
14


சுயதொழில் முயற்சிக்கு ஊக்கம்
05

# புலம்பெயர் தமிழர்கள் மீது அமெரிக்கா கண்காணிப்பு

**அமெரிக்காவின் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைக்குள் புலம்பெயர் தமிழர்களின் சட்டவிரோத நிதி நடவடிக்கைகள் சிக்கியுள்ளன.**

புலம்பெயர்ந்த தமிழர்கள் மேற்கொள்ளும் நிதிக் கையாளுகைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை அமெரிக்கா கண்காணித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இக்கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அமெரிக்க அரசு அதிகளவு நிதியை ஒதுக்கியுள்ளது.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் தப்பிச்சென்ற முன்னாள் புலி உறுப்பினர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்கள் பல்வேறு சட்டவிரோத நிதிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டும், நிதி சேகரிப்பிலும் ஈடுபட்டு வருவதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் கணிசமான அளவு நிதி புலம்பெயர் தமிழர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு செலவிடப்பட்டதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யுத்தத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரான காலப்பகுதியில் அமெரிக்காவின் மேற்படி கண்காணிப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## புலமைப்பரிசில் பரீட்சை இன்று நடைபெறுகிறது

(கொழும்பு)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை திட்டமிட்டபடி இன்று நடைபெறுகிறது என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இப் பரீட்சையில் 3 இலட்சத்து 21 ஆயிரத்து 427 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

சிங்கள மொழிமூலம் 2 இலட்சத்து 41 ஆயிரத்து 610 பேரும் தமிழ்மொழி மூலம் 79 ஆயிரத்து 817 மாணவர்களும் தோற்றவுள்ளனர். இதற்கென 3721 பரீட்சை நிலையங்களும் 506 இணைப்பு நிலையங்களும் 33 ஒருங்கிணைப்பு நிலையங்களும் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் நேற்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் சத்தியப் பிரமாண வைபவம் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வேட்பாளர்கள் 193 பேரும் வரவேற்கப்பட்டு (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஆக்கபூர்வமாக அரசு பேசினால் பேச்சைத் தொடர நாமும் தயார்



(யாழ்ப்பாணம்)

அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களில் ஆக்கபூர்வமாக ஈடுபடுவதாக இருந்தால் இப்பேச்சுக்களில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்வாங்காது. அத்துடன் இறுதி அரசியல் தீர்வை நோக்கியதாக இப்பேச்சுக்கள் முன்கொண்டு செல்லப்படவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பதவிப் பிரமாண வைபவத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

2010 ஆம் ஆண்டு சித்திரை மாதம் அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களது பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுக்களில் ஈடுபட சம்மதம் தெரிவித்தது. எனினும் இவ்வருடமே அரசு எம்முடன் பேச்சுவார்த்தையை (15 ஆம் பக்கம் பார்க்க)

## இனம்புரியாத காய்ச்சல் குடும்பஸ்தரின் உயிர் குடித்தது

(கரணவாய்)

கரவெட்டி கலட்டிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் 3 நாள் காய்ச்சலினைத் தொடர்ந்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற சமயம் மரணமடைந்துள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் குறித்த பகுதியைச் சேர்ந்த காத்திகேசு சிவா (வயது 42) என்பவர் 3 நாள் தொடர்ச்சியான காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை வழியில் மரண மடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (18)

## தாதியர் சங்கத்துடன் பேச்சு போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுக்காலை 3 தாதியர் சங்கங்கள் இணைந்து பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றை காலை 8 மணியிலிருந்து 10 மணி வரை நடத்தின.

யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திர - சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றிய தாதி உத்தியோகத்தர் ஒருவரை தரக்குறைவான வார்த்தைகளால் சத்திர சிகிச்சை நிபுணர் திட்டியதாகவும், அதன்பின் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தாதி உத்தியோகத்தர் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டதை கண்டித்துமே இப்பணிப் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது. (15 ஆம் பக்கம் பார்க்க)



## கொழும்பில் ஆயுதங்கள் இரகசிய வியாபாரம்?

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியில் இரகசிய ஆயுத வியாபாரம் நடைபெறுவதாக சந்தேகிக்கப்படுகிறது. கடந்த வாரம் நாடாளுமன்றத்திற்கு அருகில் உள்ள ஜப்பான் நல்லுறவுப் பாலத்திற்கு அருகில் ஆயுதக் கொடுக்கல் வாங்கல் நிகழ்வதாக நுகேகொட பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

ஸ்தலத்திற்கு சென்ற பொலிஸார் . அப்பகுதியில் உள்ள காட்டில் சோதனை நடத்தினர். அந்த வேளையில் புலிகள் பயன்படுத்தும் எம்.பி. 8 ரக கைக்குண்டு ஒன்றை மீட்டனர். எனினும் அந்தப் பிரதேசத்தில் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

ஆயுத வியாபாரத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நபர்கள் தப்பிச்செல்லும்போது அக்குண்டை (15 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்தும் ஆயுதக் கொள்வனவில் புலிகள்

(வாசிங்டன்)

உலகில் பல்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கும் புலிகளின் உறுப்பினர்கள் தொடர்ந்தும் ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

புலம்பெயர் தமிழ் மக்கள் தொடர்ந்தும் புலிகளுக்கு நிதி உதவிகளை வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

2010 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாதம் தொடர்பான அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எவ்வாறெனினும், 2010 ஆம் ஆண்டில் இலங்கையில் எதுவித பயங்கரவாத நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் (15 ஆம் பக்கம் பார்க்க)

# ‘நெடுந்தீவில் சிங்களக் குடியேற்றம்’

# அச்சம் கொள்ளத் தேவையில்லை

## யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் கமல்



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் பெரும்பான்மையின மக்கள் குடியேற்றப்படவிருப்பதாக வெளிவந்திருக்கும் செய்தியானது வழமை போல் அரசியல் சுயலாப நோக்கில் தீய சக்திகளால் திட்டமிட்டு பரப்பப்பட்டிருக்கும் வதந்திகளில் ஒன்றே என்றும் இது குறித்து யாரும் குழப்பமடையத் தேவையில்லை என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் கடந்த கால துயரங்களில் இருந்து விடுபட்டு தமிழ் மக்கள் நிம்தியானதொரு புதிய வாழ்விற்குள் சென்று கொண்டிருக்கும் இத்தருணத்தில் அவர்கள் சுமந்திருந்த பழைய காயங்களை மீண்டும் புதிப்பிக்கும் வகையில் திட்டமிடப்பட்ட வதந்திகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பரப்பி வருகின்றனர்.

இதன் மூலம் பதட்டம் நிறைந்த சூழலை உருவாக்கி அதில் அரசியல் ஆதாயம் தேடுவதே பிரதான நோக்கமாகும்.

இப்போது நெடுந்தீவில் சிங்கள மக்களை குடியேற்ற இருப்பதாக பரப்பப்பட்டிருக்கும் வதந்தியின் மூலம் இன முரண்பாடுகளுக்கு தூபமிடவும் அதன் மூலம் பதட்டம் நிறைந்த ஒரு சூழலை உருவாக்கி எமது மக்களை குழப்பத்தில் ஆழ்த்தி அதில் தமது அரசியல் சுய இலாபங்களை அரங்கேற்றுவதுமே அவர்களின் நோக்கமாகும்.

இது தவிர எமது பிரதேசங்களில் துரிதகதியில் முனெடுக்கப்பட்டுவரும் எமது அபிவிருத்திப் பணிகளின் மீது கறை பூசி அவைகளை திசைதிருப்பி திட்டமிட்டு குழப்ப எத்தனிக்கும் சூழ்ச்சிகளும் இதில் தெரிகிறது.

இவ்வாறு தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) வதந்திகள் குறித்து மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் வதந்திகளைப் பரப்பும் தீய அரசியல் நோக்கம் கொண்டவர்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஜேர்மனிய கவிஞர் மலைமகளின் “காதலெனும் சோலையிலே” எனும் கவிதைப் புத்தகம் மட்டக்களப்பில் வெளியிடப்பட்டது. மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் பேரவை மற்றும் செங்கதிர் வாசகர் வட்டம் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை வெளியீட்டு விழாவினை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு ஆணையாளர் கே.சிவநாதனுக்குத் தொழிலதிபர் நாகராஜா செபமாலை முதற்பிரதியை வழங்குகிறார்.

# ‘பனைமரக்காடு’ படப்பிடிப்பு ஆரம்பம்



பனைமரக்காடு படத்தின் பாடல் காட்சிகள் கடந்தவாரம் மணியந்தோட்டம் இறங்குதுறைப் பகுதியில் படமாக்கப்பட்டது. கடந்த காலங்களில் மக்கள் அனுபவித்த துன்பங்களையும், வாழ்வையும் சித்தரிக்கும் வகையில் இத் திரைப்படம் வெளிவர இருக்கிறது.

AAA திரைப்பட நிறுவனம் தயாரிக்கும் பனைமரக்காடு தீபாவளி தினத்தன்று இலங்கையின் முன்னணித் திரையரங்குகளில் காட்சிப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சறுக்கி விழுந்த இளைஞர் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியில் வீட்டு மாடியில் இருந்து சறுக்கிவிழுந்து இளைஞர் ஒருவர் படுகாயங்களுக்குள்ளாகிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த ஜெயசேகரம் கவாஸ்கரன் (வயது - 25) என்பவரே படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# உலக கத்தோலிக்க இளையோர் தினம்

# யாழில் அனுஷ்டிப்பு

உலக கத்தோலிக்க இளைஞர் தினம் இன்று யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் இம்முறை சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இத்தினம் ஸ்பெயின் நாட்டிலுள்ள மட்ரீட் நகரில் பாப்பரசர் பெனடிக் தலைமையில் நடைபெறவுள்ளது. இலட்சக்கணக்கில் கூடும் இளையோர் தினமானது இம்முறை 13 ஆவது தடவையாக அனுஷ்டிக்கப்படுகிறது.

குறிப்பாக வழிப்புணர்வு பாடல், கிராமிய நடனம், வீதி நாடகம் ஆகிய போட்டிகள் ஏற்கனவே இளையோர் மன்றங்களிடையே நடாத்தப்பட்டன.

பங்குகள் தோறும் இளையோர் சிலுவைப் பவனி, கொடிவாரம் போன்ற நிகழ்வுகள் முற்கூட்டியே இடம்பெற்றன. இதன் இறுதி நாளாகிய இன்று பிற்பகல் 4.00 மணிக்குப் புனித யாகப்பர் ஆலயத்தில் யாழ். ஆயர் அதி வண. மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் இடம்பெறும் திருப்பலியைத் தொடர்ந்து யாழ். யாகப்பர் ஆலயத்தின் வீதி வழியாக யாழ். பேராலயத்தில் ஒன்றுகூடும் இளையோர்கள் கலை நிகழ்வாக விடியல் இசைக்குழுவின் இன்னிசை நிகழ்வும் இடம்பெறும்.

இதில் யாழ். மறைமாவட்ட இளையோர், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் மறைமாவட்ட இளையோர் பிரதி நிதிகளும் கலந்துகொள்கின்றனர்.(52)

# ரமழான் சிந்தனை



இ:.திகா:.ப் இருப்பவருடைய விஷயத்தில் அவர் பாவங்களை விட்டும் பாதுகாக்கப்படுகின்றார். நற்செயல்கள் அனைத்தையும் செய்பவரைப் போன்ற நன்மைகள் அவருக்கு எழுதப்படுகின்றன. (105)




## தெய்வீக இசை அரங்கு

நல்லூர் முருகன் ஆலய மகோற்சவ காலத்தில் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் தினமும் மாலை 6.30 மணிமுதல் 8 மணி வரை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் தெய்வீக இசையரங்கு நடைபெற்று வருகின்றது.

இதில் 18 ஆம் திருவிழாவான திருக்கார்த்திகைத் திருவிழாவில் இன்று நடைபெறவுள்ள வயலின் கச்சேரியில், வயலின் எஸ்.கோபிநாத், கே.குகபரன், மிருதங்கம் - வி.ரமணா, கடம் - எஸ்.சிவா ஆகியோர் அணிசேர் கலைஞர்களாக பங்குபற்றவுள்ளனர்.

* * * * * *

## ஆன்மீகச் சொற்பொழிவுகள்

சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவில் 14 ஆம் நாளான இன்று “எங்கே தேடுகிறாய்” என்னும் விடயம் பற்றி ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு சொற்பொழிவாற்றவுள்ளார்.

* * * * * *

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் மாலை 3 மணிமுதல் 6 மணிவரை நடாத்தப்பட்டுவரும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று கிரியைகளின் பயன் என்னும் பொருளில் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளில் அனலைதீவு மனோன்மணி அம்பாள், தெல்லிப்பளை தோதரை அம்பாள், அரியாலை சித்தி விநாயகர் ஆகிய அறநெறிப் பாடசாலைகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

# துறைமுகத் தொழிலாளி கைவிரல்களை இழந்தார்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை துறைமுகத்தில் வேலை செய்துகொண்டிருந்த இளைஞர் ஒருவரின் கைகள் கிரேன் இயந்திரத்தில் சிக்கிக் கொண்டதால் கைவிரல்களை இழந்துள்ளார்.

இச்சம்பவம் - நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது மல்லாகம் கோணப்புலம் முகாம் பகுதியைச் சேர்ந்த சிவானந்தன் நிஷாந்தகரன் (வயது - 20) என்பவரே விரல்கள் துண்டிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை அவசரப் பிரிவில அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)





பாழ்ப்பாணத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நிறுவனமாகிய அன்பொளி கல்வியகத்தில் மாணவர்களை ஆசீர்வதிக்கும் நிகழ்வு கடந்தவாரம் இடம்பெற்றது. இங்கு கல்வியைப் பெற்ற 700 இற்கும் அதிகமான தரம் 5 மாணவர்கள் ஆசிரியர் வே.அன்பழகனிடமும் விருந்தினர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்களிடமும் ஆசிபெற்றுச் சென்றனர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களுள் ஒருவராக இந்த ஆண்டு ஆசிய பசிபிக் சிறுவர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக யப்பான் சென்று வந்த யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் மாணவி பா.தாரணி கலந்து சிறப்பித்தார்.

துன்பம் இருக்கும் இடத்திற்கு நாமாக முன்வந்து சென்று அந்தத் துயரத்தை நீக்க நம்மால் முடிந்த செயலைச் செய்ய முயல வேண்டும். இது மிகப் பெரிய தர்மமாகக் கருதப்படுகிறது. - காஞ்சிப் பெரியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஊழலுக்கு எதிரான போராட்டம்!

இயக்குனர் ஷங்கரின் முதல்வன், அந்நியன் போன்ற படங்களும், ஏ.ஆர்.முருகதாஸின் ரமணாவும் மக்களால் பெரிதும் வரவேற்புப் பெற்ற படங்களாக அமைந்ததற்கு ஊழல், இலஞ்சம், அதிகார வர்க்கத்தின் அலட்சியம் போன்றவற்றில் மக்களுக்கிருந்த வெறுப்பும் இயலாமையும் தான் காரணம். ஊழல் கொடுமையிலிருந்து மீள்வதற்கு யாராவது கற்பனையான தீர்வுகள் சொன்னால் கூட மக்கள் புளகாங்கிதமடைந்து வரவேற்கிறார்கள் என்றால், அந்தளவிற்கு அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதே பொருள்!

ஊழலை எதிர்த்துப் பொங்கும் நாயகர்கள் வெறும் செலுலோயிட் பிம்பங்களாகத் திரையில் வந்தபோதும் கூட, அவர்கள் மக்களது மனசாட்சியின் உருவங்களாக மாறிவிடுவது இதனால் தான்.

"தீயன புரிதல், முறைதவிர் உடைமை
செம்மைதீர் அரசியல், அநீதி
ஆகியவற்றென் நெஞ்சு இயற்கையின் எய்தும்
அரும்பகை அதன்மிசை ஆணை"

என மகாகவி பாரதி மாஜினியின் பிரதிக்கினையில் சொல்வது போல, தன்னியல்பாகக் கிளர்ந்து இந்திய வீதிகளில் இறங்கியிருக்கிறது எதிர்ப்பு!

வலியோர் எளியோரை வதைக்கும் வழிமுறைகளில் இந்த ஊழலும் பிரதானமான ஒன்று. அதனால்தான், இந்தியாவில் அண்ணா ஹசாரேயின் போராட்டம், இந்தியாவின் இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என வர்ணிக்கப்பட்டு ஊடகங்களினதும் மக்களினதும் ஆதரவைப் பெற்றிருக்கிறது.

இளைய சமுதாயம் தெருவில் இறங்கி, அநீதிக்கெதிரான தங்கள் அதிருப்தியைக் காட்டத் தலைப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, வளர்ந்துவரும் அல்லது குறையபிவிருத்தி நாடுகளிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் ஏதாவது ஒரு விதத்தில் லஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருப்பார். தங்கள் வேலை நடைபெற வேறு வழியே இல்லை என்ற கட்டாயத்தால் இவர்கள் லஞ்சம் கொடுப்பதற்கு உடன்பட்டாக வேண்டியிருக்கிறது. அந்தக் குற்ற உணர்வும் ஆத்திரமும்தான் இவர்கள் வீதியில் இறங்கிப் போராட முற்பட்டிருப்பதன் காரணம். இந்தப் போராட்டங்களில் பங்கெடுக்கும் பலரும் ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்கும்போது, தாங்கள் தனிப்பட்ட முறையில் லஞ்சத்தால் அடைந்த பாதிப்புகளையே சொல்கிறார்கள்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூட, தனது சுதந்திர தின உரையில், ஊழல்கள் இருப்பதை ஒப்புக்கொள்கிறார். திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் பணம் அதிகாரிகளின் சட்டைப் பைக்குள் போகிறது என்கிறார். அம்பலமாகியுள்ள ஊழல்கள் குறித்து நடவழக்கை எடுக்கப்பட்டுள்ளது என்கிறார். ஊழலை எதிர்க்கும் வலுவான சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவரத் தயார் என்கிறார். ஆனால் அவரது அரசு கொண்டு வரும் சட்ட மசோதாவில் குறை இருக்கிறது நீக்குங்கள் என்கிற ஹசாரே குழுவினரின் போராட்டத்திற்குப் பதிலாக, "பொலிஸ் தன் கடமையைச் செய்யும்" என்கிறார்.

மன்மோகன் சிங் அரசு தயங்குவது, "பதவியில் இருக்கும் பிரதமரும், நீதித்துறையும் கூட அந்த லோக்பால் சட்ட மசோதாவிற்குள் உள்ளடக்கப்பட வேண்டும்" என்கிற ஹசாரே குழுவினரின் பிடிவாதத்திற்கு.

அண்ணா ஹசாரேயின் ஊழலை எதிர்த்த அகிம்சைப் போராடடத்திற்கு மக்களின் ஆதரவு திரள்வது என்னவோ உண்மை தான். அதேநேரம், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கு மேலாக, நாங்கள் சொல்வதை நீங்கள் கேளுங்கள் என்று நடைமுறைக் கொவ்வாததாகவும் சில கோரிக்கைகளை வைத்து ஹசாரே குழுவினர் அடம்பிடிப்பதில் உள்ள நியாயமின்மையையும் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். குறிப்பாகப் பதவியில் இருக்கும் பிரதமரும், நீதித்துறையும் சட்ட வரையறைகளுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்றாலும், அதில் சில நடைமுறைச் சிக்கல்களும், ஜனநாயக ஆபத்தும் இருப்பதைச் சொல்கிறார்கள்.

குறிப்பாக எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்த ஓர் அமைப்பும் நாடாளுமன்றத்தைவிட உயர்ந்ததாக இருப்பது மக்களாட்சித் தத்துவத்துக்கு எதிரானது என்பதையே கவனிக்க வேண்டும் என்கிறார்கள். அதாவது, நமது நாடாளுமன்ற உறுப்பினர்களின தரம் சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை என்றால் அது அவர்களைத் தேர்ந்தெடுத்த நமது குற்றம்தானே? என்பதுதான் விஷயம்!

– ஆசிரியர்.

# மர்மமனிதன் பீதியால் கற்பிட்டியில் பதற்றம்

(கொழும்பு)

புத்தளம், கற்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட பதற்ற நிலையையடுத்து, கடற்படை மற்றும் பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

கற்பிட்டி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஒரு நபரினால் பெண் ஒருவர் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார். அதனைத் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்ட பிரதேச மக்களின் சந்தேகத்திற்கிடமாக நட மாடிய ஒருவனைப் பிடித்துக் கட்டி வைத்து தாக்கியுள்ளனர். தாக்கப்பட்டவர் கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, தாக்கப்பட்டவர் தான் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் என கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து கற்பிட்டி நகரில் கூடிய பொது மக்கள் அந்த அந்நபரின் செயற்பாட்டை கண்டித்து, அவருக்கு எதிராக நடவடிக்கையெடுக்க வேண்டுமென வலியுறுத்தியதால் பிரதேசத்தில் பதற்றநிலை ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலையினை அடுத்து பொலிஸ் உயரதிகாரிகள் , கற்பிட்டிக்குச் சென்று கற்பிட்டி நகரிலுள்ள பள்ளியில் அமைதியினை எற்படுத்தும் நோக்கத்தில் மக்களுடன் கலந்துரையாடினர். கற்பிட்டி பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகரின் தலையீட்டால், நிலைமை வழமைக்குக் கொண்டுவரப்பட்டது.

பின்னர் இரவு வேளைகளில் கற்பிட்டி பிரதேசத்தில் விசேட பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பொலிஸாரினால் உறுதியளிக்கப்பட்டது.

இந்த நிலையில், இப்பிரதேசத்தின் பாதுகாப்புக்காக புத்தளத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான பொலிஸார் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, புத்தளம், ரத்மலானைப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சந்தேகதிற்கிடமானவர்கள் நடமாடுவதாக கூறப்பட்டதையடுத்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. பொதுமக்கள், கிராமத்தினைச் சுற்றி வளைத்து தேடுதலில் ஈடுப்பட்ட போதும் சந்தேக நபர்கள் எவரும் பிடிபடவில்லை.

## முதலைக்குடி பிள்ளையார் கோவில் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(கரணவாய்)

கரணவாய் தெற்கு வெள்ளியாடு முதலைக் குடிப் பிள்ளையார் கோவிலுக்கு செல்லும் வீதி குண்டும் குழியுமாக பலத்த சேதமடைந்துள்ளதால் இவ் வீதிகளுடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் கஷ்ட நிலையை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப் படுறது

குறிப்பாக கரணவாய் தெற்குப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்ள நாளாந்தம் இவ்வீதிகளை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இவ்வீதிகள் சேதமடைந்துள்ளதால் இந்த மக்கள் உட்பட இவ்வீதியால் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் பெரும் சிரமத்தின் மத்தியில் தமது பயணத்தை மேற்கொள்வதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

வெகுவாக சேதமடைந்துள்ள இவ்வீதியை புனரமைக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## மண்ணித்தலை செபஸ்தியார் ஆலய வருடாந்தப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

பூநகரி - மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான ஆயத்தநாள் வழிபாடுகள் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும் வழிபாடுகளுடன், 27ஆம் திகதி நற்கருணைப் பெருவிழாவும், 28ஆம் திகதி காலை 7 மணிக்குத் திருநாள் திருப்பலியும் நடைபெறவுள்ளது.

மண்ணித்தலைக்கு பக்தர்கள் தங்கிநின்று செல்வதற்கான அனுமதியை ஆலய நிர்வாகத்தினர் இராணுவத்தினரிடம் பெற்றுள்ளனர்.

இதன்படி இன்று தொடக்கம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பக்தர்கள் அங்கு தங்கி நிற்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திருவிழாவிற்கு வன்னியில் இருந்தும் பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (21)

## நீண்ட காலமாகத் திருத்தப்படாத ஊர்காவற்றுறை செட்டிபுல வீதி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட 780 வழி இலக்க சாட்டி செட்டிபுல வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் காணப்படுகின்றது. இவ்வீதியானது யாரும் கவனிப்பாரற்று பள்ளமும், திட்டியுமாகவும், புழுதி நிறைந்ததாகவும் காணப்படுகிறது. இதனால் இவ்வீதியினால் பயணம் செய்பவர்கள் மட்டுமல்லாது, வாகனங்களைச் செலுத்திச் செல்லும் சாரதிகளும் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே பயணிகளின் நலன் கருதியும், இப்பிரதேசத்தின் நலன்கருதியும் இவ்வீதியினைத் திருத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (65)

## துணுக்காயில் 8 நிலையங்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

(அம்பலப்பெருமாள்)

இன்று நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் துணுக்காய் கல்வி வலயத்தில் 679 மாணவர்கள் தோற்றுவதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்துள்ளார்.

இதில் கோட்டைக்கட்டியகுளம் அ.த.க. பாடசாலை, மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் மகாவித்தி, பாண்டியன்குளம் மகாவித்தி, பாலிநகர் மகாவித்தி, மாங்குளம் மகாவித்தி கற்சிலைமடு அ.த.க பாடசாலை ஒட்டுசுட்டான் மகா வித்தி ஆகிய 8 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (121)

## மன்னார் எண்ணெய் வள ஆய்வின் முடிவு அடுத்த வருடம் வெளியிடப்படவுள்ளது

### கெய்ன் லங்கா நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

மன்னார் வளைகுடாவில் எண்ணெய் வள ஆய்வுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில்- அங்கு எண்ணெய்வள இருப்புத் தொடர்பான உண்மையான-முழுமையான தகவல்களை 2012 ஆம் ஆண்டிலேயே வெளிபடுத்த முடியும் என்று அகழ்வுப்பணியில் ஈடுபட்டுள்ள கெய்ன் லங்கா நிறுவனம் தெரிவித்துள்ளது.

எண்ணெய் வளத்தை அறிந்துகொள்வதற்கான அகழ்வுப் பணிகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டன. இந்த அகழ்வுப் பணிகளுக்காக சீனாவின் தயாரிப்பான அதிநவீன அகழ்வுக் கப்பல் பயன்படுத்தப்படுகிறது.

'சிக்கு' என்ற பெயருடைய சகல வசதிகளையும் கொண்ட இந்த அதிநவீன கப்பல் ஆழ்கடலில் நங்கூரமிட்டு அகழ்வுப் பணிகளை வெற்றிகரமான முறையில் முன்னெடுத்து வருவதாக இந்தியாவிலிருந்து இலங்கை வந்த இந்த நிறுவனத்தின் உயரதிகாரியொருவர் குறிப்பிட்டார்.



தங்களுக்கு ஆழ்கடலிலும்-நிலத்திலும் எண்ணெய் அகழ்வுகளை மேற்கொள்ளும் திறமை இருக்கிறது என்றும் பல் தேசங்களைச் சேர்ந்த இத்துறை நிபுணர்கள் தங்கள் நிறுவனத்தில் பணியாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவின் ஆந்திரப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் ஏற்கனவே எண்ணெய் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் கெய்ன் இந்தியா நிறுவனமே இலங்கையில் இந்த அகழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ளது.

மன்னார் வளைகுடா பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட மூன்று இடங்களில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர்- இப்பிரதேசங்களில் எண்ணெய் வளம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் இலங்கை பொருளாதார ரீதியில் தன்னிறைவு அடையும் நிலைக்கு உயர்ந்து விடுவது உறுதியென்றும் கூறினார்.

# மதங்களின் கோட்பாடுகளுக்கு கட்டுப்பட்டு வாழப்பழகவேண்டும்

## மலர் வெளியீட்டில் மாநகர முதல்வர்



(யாழ்ப்பாணம்)

எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தத்தம் மதங்களின் கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் நமது பாரம்பாரிய கலை, கலாசார விழுமியங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமென யாழ் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழுவினரால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட நல்லைக் குமரன் மலரின் 19ஆவது இதழ் வெளியீட்டு விழாவிலும், யாழ். விருது வழங்கும் வைபவத்திலும் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாநகர ஆணையாளரும், சைவ சமய விவகாரக்குழுவின் தலைவருமான மு.செ. சரவணபவவின் தலைமையில், நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இன்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் நல்லைக் கந்தன் உற்சவங்கள் எப்படி நடந்தனவோ அப்படியே இப்போதும் நடைபெற்று வருகின்றது. நல்லைக்குமரனின் அருளும், ஆசியும் உலகெங்கும் துலங்கி வருவது எமக்குப் பெருமை சேர்க்கும் விடமாகும். எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியிலும் நல்லைக்குமரன் மலர் தொடர்ந்து 19 வருடங்களாக வெளிவருகின்றதென்றால் அதன் சிறப்பைப் பற்றி எப்படிக் கூறினாலும் அது காலத்தால் அழியாததொன்றாகும்.

பாரம்பாரிய விருதான 'யாழ். விருது' சமூக, சமய அறப்பணிகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் புற்றுநோயியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ந. ஜெயக்குமாரனுக்கு யாழ். விருது வழங்கப்பட்டுள்ளது என்றார். (எஸ்)

## சங்கிலி அபகரிப்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த இளம் யுவதியின் தங்கச் சங்கிலி சாதுரியமான முறையில் திருடர்களால் அறுத்துக் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் 9.00 மணியளவில் குறித்த பகுதியில் கிராம அலுவலகத்துக்கு அருகில் உள்ள வீதியால் பயணித்துக்கொண்டிருந்த இந்த யுவதியின் சங்கிலியையே திருடன் அறுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (110)


## காணிப்பதிவு நடவடிக்கை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்களின் காணிகளை பதிவு செய்யும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது.

இப்பிரதேசங்களில் மக்கள் குடியிருக்கும் காணிகள் மற்றும் பயன்பாட்டில் உள்ள, பயன்படுத்தப்படாத காணிகள் என பல்வேறு ரீதியாக கிராம அலுவலர்களினால் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. (121)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கார்த்திகைத் திருவிழா



கார்த்திகைத் திருநாளில் கைகுவித்து வணங்கினோம்
ஈர்த்தென்னையாட் கொண்டு பூச்சப்பரத்திலே வருவாய்!
ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆடியே வருவோம்
பார்த்து மகிழ நீ அலங்காரக்காட்சி தருவாய் முருகா!

- இராசையா ஸ்ரீதரன்

ஆறு முகமும் அழகு முகங்கள்
ஆறு பெண்கள் அரவ ணைப்பில்
பேறு பெற்றாம் ஒரே முகமாய்
பேரைச் சொல்லும் கார்த்திகேயன்!

- மூலபாரதி.

ஆறு முகனுதித்தே ஆணவத்தைப் போக்கியதைக்
கூறுங் திருக்கார்த்திகை விழா - பேறுபெறப்
பேரொளியைத் தந்த பெருமானார் நல்லூரிற்
பாரொளியாய் நிற்பான் பணி.

- கந்தன் பாமாலை

கார்த்திகை திரு நாளினிலே
கந்தா உன் திருப் புகழைப் பாடி
ஊர் உலகத்தார் மகிழ்ந்தே
உன்னடியே சரணம் என்றார்

- சன்

## நீர்ப்பாசன பிரிவு அலுவலகம் தொண்டைமானாறில் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரிவு அலுவலகமொன்று என்றிப் திட்டத்தின் கீழ் தொண்டைமானாற்றுப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் அலுவலகத்தின் நிர்மாண வேலைகள் அனேநகமாக பூர்த்தியடையும் நிலையை எட்டியிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

## மனித உரிமை ஆணைக்குழுவினால் கிளிநொச்சியில் நடமாடும் சேவை

(முரசுமோட்டை)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் கிளிநொச்சி பாரதிபுரம் பகுதிகளில் நான்கு கிராமங்களை உள்ளடக்கிய வகையில் நடமாடும் சேவையொன்று நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு ஆரம்பமான இந்த நடமாடும் சேவை பாரதிபுரம், கிருஷ்ணபுரம், மலையாளபுரம், விவேகானந்தநகர் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய வகையில் பாரதிபுரம் தமிழ் வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

இந்த நடமாடும் சேவையில் மனித உரிமை ஆணைக்குழுவின் சட்ட உதவி ஆணைக்குழுவினால் கரைச்சிப் பிரதேச செயலகத்தின் பதிவாளர் திணைக்களங்கள் மற்றும் பொலிஸாரின் பெண்கள், சிறுவர் பிரிவு போன்ற பிரிவுகள் கலந்து கொண்டு மக்களுக்கு சேவைகளை வழங்கின.

இதன்போது காணி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான மண்ணின் மகிமை திட்டத்தின் கீழ் காணி சம்பந்தமான பதிவுகளும், பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளும், காணாமற்போனோர், காயமடைந்தோர் தொடர்பான பதிவுகளும் இடம்பெற்றுள்ளன.(110)

## வெடிபொருட்கள் மீட்பு

முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில் விசேட பொலிஸ் பிரிவினர். மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஒரு தொகுதி வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது கிணறு ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 60 எம்.எம். எறிகணைகள், கைக்குண்டுகள், துப்பாக்கி ரவைகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பிரிவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (110)

## நிர்வாக சபை தெரிவு

(சாவகச்சேரி)

ஏழாலை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நடப்பாண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவு கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஜெ. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் க. கஜன் தலைவராகவும், கருணாநிதி உப தலைவராகவும், அ. ரமணன் செயலாளராகவும், எஸ். மயூரன் உப செயலாளராகவும், பி. ஐங்கரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 10 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (11)

## கச்சாய் சாளம்பன் ஆலயத்திற்கான போக்குவரத்துப் பாதை புனரமைப்பு

(சாவகச்சேரி)

கச்சாய் கடற்கரை சாளம்பன் கோயில் போக்குவரத்துப் பாதை 521 ஆவது படையினர், கடற்றொழில் சங்கத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கச்சாய் இளைஞர் அணித் தலைவர் குமார் சர்வானந்தனினால் இப்பாதைக்கான புனரமைப்பு வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வேலைத் திட்டம் 52ஆவது படையணியைச் சேர்ந்த ஜெயரட்ண தலைமையில் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (11)


## காலபோக நெற்செய்கையாளர்கள் பதிவை மேற்கொள்ள அறிவுறுத்து

(வடமராட்சி கிழக்கு)

2011ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையில் ஈடுபடவிருக்கும் வத்திராயன் கமக்கார அமைப்பினைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பதிவுகளை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தாம் செய்கை மேற்கொள்ளவிருக்கும் காணி உறுதியின் போட்டோ பிரதி, குத்தகைக்குக் காணி எடுத்து செய்கை மேற்கொள்வோர் காணி உரிமையாளரின் கடிதம் மற்றும் அக்காணி உறுதியின் போட்டோ பிரதி ஆகிய விபரங்களை வத்திராயன் கமக்கார அமைப்பின் செயலாளர் ஆர். யோகநாதனிடம் சமர்ப்பித்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவுகளை மேற்கொள்ளாத விவசாயிகள் காலபோக செய்கையை மேற்கொள்ள முடியாது போகும். எனவே, விவசாயிகள் குறித்த திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கமக்கார அமைப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (38)



யாழ். சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான நிலையத்தினால் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்பட்ட பெண்களுக்கான விழிப்புணர்ச்சிக் கருத்தரங்கில் பயிற்சியாளர் மாணவிகளுக்கு விளக்கம் அளிப்பதைக் காணலாம். (68)

## முன்பள்ளிச் சிறார்களின் கற்றலுக்கு பெற்றோரும் பங்காற்ற வேண்டும்

### காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் முத்துகண்ணன்

(யாழ். நிருபர்)

முன்பள்ளிச் சிறார்களின் ஆற்றல்கள், திறமைகள் சிறந்த முறையில் வெளிப்படுத்தப்படும்போது நல்லதொரு எதிர்கால சமுதாயத்தை உருவாக்க முடியும். இதற்கு முன்பள்ளி ஆசிரியர்களுடன் பெற்றோர் இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு காரைநகர் கல்லந்தாழ்வு ஸ்ரீமுருகன் சிறுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய காரைநகர் பிரதேச சபை உறுப்பினரும், ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் காரைநகர் பிரதேச அமைப்பாளருமான முத்துகண்ணன் (ரஜனி) குறிப்பிட்டார்.

ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத் தலைவர் அ. முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் பேசுகையில், முன்பள்ளிச் சிறார்கள் சலனம் அற்றவர்கள். அவர்களது பிஞ்சு மனங்களில் நல்ல எண்ணங்களை விதைக்க வேண்டும்.

அவர்களது ஆற்றல்கள் சிறந்த முறையில் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும்.

முன்பள்ளிச் சிறார்களை நெறிப்படுத்தும் பாலர் பாடசாலை ஆசிரியர்களின் பணி மிகக் கஷ்டமானது. அவர்களின் செயற்பாடுகளுக்குப் பெற்றோர்கள் உதவ முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இந்த நிகழ்வில் மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் க. சுதாகரன் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (10)

# சுயதொழிலை மேற்கொண்டு சொந்தக்காலில் நில்லுங்கள்

## இளைஞர், யுவதிகளுக்கு உதயன் எம்.பி. அறிவுரை

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற இளைஞர், யுவதிகள் அரச வேலை வாய்ப்பை எதிர்பார்த்து காலத்தை வீண் விரய மாக்காது சுயதொழிலை மேற்கொள்ள முன்வர வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில் வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்கள் தெரி வித்துள்ளார்.

அவுஸ்ரேலியா குடியுரிமை மற்றும் குடிவரவு குடியகல்வு பணியகத்தின் நிதியுதவியுடன் கெயார நிறுவனத்தால் செயற்படுத்தப்படும் சமூக பொரு ளாதாரத்தை மீள ஒழுங்கமைத்தலுக்கான திட்டத் தின் மூலம் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த வலி வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மயிலங்கூடல் கிராம அலுவலர் பிரிவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயிற்சியா ளர்களுக்கு காசோலைகள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் 30 வருடகால யுத்தத்தினால் இப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களை அனு வித்தனர். தற்போது இம் மக்கள் மீளவும் தம் சொந்த இடங்களில் குடியமர்ந்து வருகின்றனர். இடம்பெயர்ந்து மீள் குடியமர்ந்த மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நாம் விரைவாக நிறை வேற்றி வருகின்றோம். அவ்வாறே இப் பிரதேசங் களில் படித்து விட்டு வேலைவாய்ப்பின்றி இருக் கும் இளைஞர், யுவதிகள் அரச வேலை வாய்ப்பை எதிர்பார்த்து காலத்தை வீண் விரயம் செய்யாது சுயதொழிலை மேற்கொண்டு சொந்தக் காலில் நின்று தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முன் வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வலி வடக்கு பிரதேச செயலர் முரளிதரன் தலைமையுரையில் வலிவடக்கு பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய் வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர் கள் மேற்கொண்டு வரும் பெருமுயற்சிக்கு தனது நன்றிகளை தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

கெயார் நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் சமூக பொருளாதாரத்தை மீள ஒழுங்கமைத் தலுக்கான திட்டத்தின் மூலம் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த வலிவடக்கு தெல்லிப்பளை செய



லர் பிரிவிற்குட்பட்ட மயிலங்கூடல் கிராம அலு வலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 06 பயனா ளிகளுக்கு சாரதிப் பயிற்சி பெறுவதற்காக தலா 18000 ரூபா பெறுமதியான காசோலைகளும் கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் பிரதேச செயலகத்தில் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் 2010ஆம் ஆண்டு தையல் பயிற்சி யினை நிறைவு செய்து வெளியேறிய 11 யுவதி களுக்கு தையல் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு தலா 35000 ரூபா பெறுமதியான காசோலைகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), கெயார் நிறுவனத்தின் யாழ் மாவட்ட திட்டப் பணிப்பா ளர் ஆ. இராசரட்ணம், வலிவடக்கு பிரதேச செயலர் முரளிதரன், உதவித்திட்டப் பணிப்பாளர் சிவகுமார் கெயார் சர்வதேசத்தின் கள இணைப் பாளர் செல்வி அன்ரன் செல்வகுமார் லிண்டா ஆகியோர் வழங்கி வைத்தனர்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(21.08.2011 – ஞாயிற்றுக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
ஆவணி 04 ஆம் நாள்.
இராகுகாலம் 4.35–6.05, சுபநேரம் 9.05 –10.35,
நட்சத்திரம்: பரணி மு.ப 10.38 வரை
திதி: ஸப்தமி பி.இ 12.13 வரை
கார்த்திகை விரதம்

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பண வரவு, தேக ஆரோக் கியம், அதிகாரப் போட்டி, சகோதர வெறுப்பு, வாய்ப்புக்களை இழத்தல்

ரிஷபம:– தேக சுகக்குறைவு பணக் கஷ்டம், மருத்துவச் செலவு, மனக்கவலை, தொழில் முடக்கம்.

மிதுனம் :– பண வரவு, இனசன அழைப்பு, கல்விப்பாராட்டு, காரிய சித்தி, தெய்வதரிசனம்.

கடகம்:– தெய்வதரிசனம், பணக் கஷ்டம், கடன் வாங்குதல், வீண் அலைச்சல், பிணக்குத்தீர்தல்

சிம்மம்:– பண வரவு, நினைத்ததைச் சாதித்தல், ஆத்திரப்படல், மன மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம்.

கன்னி :– தெய்வதரிசனம், பணக் கஷ்டம், காரிய முடக்கம், பயனற்ற பேச்சு, மனக் குறை.

துலாம் :– பண வரவு, நினைத் ததைச் சாதித்தல், தேக ஆரோக் கியம், சகோதரபாசம், மனமகிழ்ச்சி.

விருச்சிகம்– தொழில் நஷ்டம், பணக் கஷ்டம், தேக சுகக்குறைவு, தெய்வ தரிசனம், வாய்ப்புக்களை இழத்தல்.

தனுசு:– பண வரவு, நண்பர் விமர்சனம், சுற்றத்தார் ஆதரவு, தேக ஆரோக்கியம், மனமகிழ்ச்சி.

மகரம:– தெய்வதரிசனம், பணக் கஷ்டம், உடல் உபாதை, வசதிக்குறைவு, அதிகாரிகள் கோபம்.

கும்பம் :– பண வரவு, மன மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், வெளிநாட்டு உதவி, சபையில் வரவேற்பு.

மீனம் :– தொழில் முடக்கம் பணக் கஷ்டம், பிணக்குத்தீர்த்தல், அநீதியி ழைத்தல் சபலபுத்தி.

# கிளிநொச்சியில் 3000 பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மூவாயிரம். பேர் தேசிய அடையாளஅட்டைகள் இல்லாத நிலையில் இருப்பதாக மாவட்ட செயலக தகவல்கள் தெரி விக்கின்றன.

கடந்த மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்த லின் போது 3 ஆயிரம் வரையானோர் தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்று அதன் மூலம் வாக்களித்துள்ளனர்.

இதனை மதிப்பீடு செய்து பார்க்கும்போது இந்த 3ஆயிரம் பேரை விடமிகவும் அதிகமான வர்கள் தேசிய அடையாள அட்டைகள் இல்லாது இருக்க லாம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (110)

# பாடசாலைச் சூழலைப் பேண பயன்தரு மரங்கள் நாட்டல்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் மல்லாவி மத்திய கல்லூரியின் சூழலை பேணும் நடவடிக்கையில் கல்லூரி உயர்தர மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பாடசாலைச் சூழலை துப்பரவு செய்து வரும் மாணவர்கள் வாழை, தென்னை போன்ற பயன்தரு மரங்களை நாட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டுவரு கின்றனர்.

மாணவர்கள் இந்த முன்மாதிரியான செயற்பாட் டினை கல்வி அதிகாரிகள் பாராட்டிவருவதாக தெரிவிக்கைப்படுகிறது. இதேவேளை பாடசாலை கட்டடங்களை சுற்றியுள்ள சுற்றாடல் சிரமதானம் மூலம் துப்புரவாக்கப்பட்டு பயன்தரு மரங்களை நாட்டி மாணவர்கள் தமது பாடசாலையை அழகாக மாற்றியுள்ளதாக பலராலும் தெரிவிக்கப்படுகிறது. (121)

# பருவப் பெயர்ச்சி மழையினால் தணிகிறது வெப்பநிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பருவப்பெயர்ச்சி மழை திடீர் திடீரென பெய்து வருவதால் அண்மையில் நிலவிய கடும் வெப்பம் தற்போது ஓரளவு தணிந்து காணப்படுவதாகத் தெரி விக்கப்படுகிறது.

வடமராட்சி,தென்மராட்சி,வலி கிழக்கு, வலி காமம் மேற்கு போன்ற பகுதிகளில் இந்த இரண்டு நாட்களில் சுமாரான மழை பெய்துள்ளன.

கடும் வரட்சி வெப்பத்தால் பெரும் இக்கட்டு நிலைக் குத் தள்ளப்பட்டிருந்த மக்களுக்கு தற்போது பெய்த மழை இவ் வெப்பத்தை தணித்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. அடுத்து வரும் நாட்களில் இந்த மழை பரவலாக எல்லாப் பகுதிகளிலும் பெய்யும் என்று திருநெல்வேலி வானிலை அவதான நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கினறன. (வி)

# சுகாதாரத்திற்கு பங்கமேற்படுத்தும் நல்லூரிலுள்ள மலசலகூடங்கள்

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு தற்காலிகமாக அமைக்கப்பட்டடுள்ள மலசலகூடங்கள் அடியார்களின் சுகாதாரத்திற்கு பங்கமேற்படுத்தும் வகையில் காணப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தற்காலிக மலசல கூடங்கள் சீராகப் பராமரிக்கப்படாமை யால் அதனைப் பயன்படுத்துவோரும், அவ்வீதி வழியால் செல்வோரும் அதன் துர்நாற்றத்தை சகிக்காது மூக்கைப்பொத்திக் கொண்டு செல்லவேண்டியிருப்பதாகவும் அடியார்கள் முகத்தைச் சுழித்துக் கொள்வதாகவும் தெரியவந்துள்ளது.

ஆலய உற்சவங்களுக்கு வரும் அடியார்களை விட, தென்னி லங்கையில் இருந்து வரும் பெருமளவிலான சுற்றுலாப்பயணி களும், ஆலயச்சூழலில் வர்த்தக நிலையங்களை வைத்திருப் பவர்களும் இம் மலசலகூடங்களை பாவித்துவருவதினாலேயே அடியார்களுக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டுவருவதாகத்தெரிவிக் கப்படுகிறது.

# பதவி உயர்வு கிடைத்தபோதிலும் வழங்கப்படாத சம்பள நிலுவைகள்

## - ஆசிரியர்கள் ஆதங்கம்

(மருதனார்மடம்)

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேந்த பல ஆசிரியர்களுக்கு 2005/04ஆம் இலக்கச் சுற்று நிருபத்திற்கமைய பதவி உயர்வுக்கடி தம் வழங்கப்பட்டுள்ளபோதும் அப்பதவி உயர்வுக்கான சம்பள நிலுவை இதுவரை தமக்குக் கிடைக்க வில்லை என சம்மந்தப்பட்ட ஆசிரியர்கள் கவலைவெளியிட்டுள்ளனர்.

மேற்படி ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுக்கடிதங்கள் வழங்கப் பட்டபோது சம்பள நிலுவைக்கொடுப்பனவு 2005ஆம் ஆண்டிலி ருந்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. பல வருடங் கள் சென்ற நிலையில் வலிகாமம் கல்வி வலயத்தைச்சேர்ந்த ஆசிரியர்கள் பலருக்கு இக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்பட வில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியசேவை 2.I இலிருந்து தரம் I க்கு தாம் பதவி உயர்வு பெற்றபோதும் அதன் பலாபலன்களை அனுபவிக்க முடிய வில்லையே என்று இவர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

தாம் பெறவேண்டிய பல இலட்சக்கணக்கான சம்பள நிலுவை யைப் பெற சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட் டார்களா என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (06)




யாழ்ப்பாணம் இப்ப கொழும்போ எண்டமாதிரிக் கிடக்குப் பாருங்கோ!

சும்மா கிடந்த இடங்களெல்லாம் புதிசு புதிசாக் கடையளும், கட்டிடங்களும் வந்துகொண் டிருக்கு. அதுக்கேத்தால்போல சனப்புழக்கமும் வரவரக் கூடிக் கொண்டுதான் போகுது இன் னும் ஒரு ஐஞ்சுபத்து வரு சத்தில சிங்கப்பூரா வந்திடும் போலத்தான் தெரியுது.

ஏதோ நான் சிங்கப்பூரைப் போய் பாத்திட்டு வந்த மாதிரிச் சொல்லிப் போட்டன். சுட்டுப்போட் டாலும், ஒண்டும் தெரியாதெண்டு சொல்லுறமாதிரி எனக்குச் சிங்கப்பூரின் வாலும் தெரியாது, நுனியும் தெரியாது.

இண்டைக்கெண்டில்ல முன்னம் கதைப்பினம் உந்தச் சண்டையொண்டு நடந்திராட்டி யாழ்ப்பாணம் சிங்கப்பூரா வந்திருக்கு மெண்டு அந்தக் கேள்விஞானம்தான்.

இப்ப பாக்கேக்க சனமும் கூடிக்கொண்டுதான் வருகுது. அப்ப ஏனுந்த தேர்தல் நடத்திறவை எங்கட மாவட்டத்து நாடாளுமன்ற அங்கத்தவர்களின்ர எண்ணிக்கையைக் குறைக்கிறதுக்கு சுடுதண்ணி ஊத்தின நாயைப்போல துடிக்கினமெண்டு தெரியேல்ல.

சனங்களின்ர எண்ணிக்கையை வைச்சுத் தீர்மானிக்கிறதெண்டா யாழ்ப்பாணத்தை இண்டைக்கொருக்காச் சுத்திப் பாக்கச் சொல்லுங்கோ!

எங்கை சனமில்லை? பஸ் நிலையம், ஆசுப்பத்திரி, றோட்டுகள், ஐஸ்கிறீம் கடை, புடவைக்கடை, மீன்கடை உப்பிடி எங்கபோனாலும் மூச்சு விடேலாத சனம்

இனி நல்லூர் திருவிழாத் துடங்கீட்டுது. அங்கை போய்ப் பாக்க வேணும் மண் போட்டா மண் விழாதெண்டு சொல்லுவினம்.

என்ர கண்பட்டிடக் கூடாது. சனம் பெருக வேணும். இழந்த எங்கட சொந்த இடத்தைப்பிடித்து எம்.பீக்களின்ர எண்ணிக்கை குறையாமல் கூடவேணுமெண்டு நல்லூரானைக் கையெடுத்துக் கும்புடுறன்.

அதேநேரம் பாருங்கோ சனம் பெருக, நாடு நகரம் அபிவிருத்தி அடையேக்க எங்கண்ட பண்பாடு, கலாசாரமும் தானாக மாறிக் கொண்டுதான் போகுது.

அதுக்குக் கவலைப் பட்டா என்ன நடக்கப்போகுது? மேலும், மேலும் நாங்கள் கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கத்தான் நேரும். யாரோ சொன்னது போல மனித நாகரீகங்கள் உடுப்பு மாத்திறதப்போல மாறி மாறி புதிசு பழசாகும்: பழசு புதிசாகுமெண்டது உண்மைதான்

அதில எனக்குக் கவலை என்னெண்டாவேறை என்னதான் முன்னேற்றத்தைக் கண்டாலும் இப்ப எங்கட புள்ளையளுக்கு கல்வியில ஊக்கமில்லாமல் போனதுதான் கவலையா இருக்கு.

இப்ப நடக்கிற சோதினையள்ல யாழ்ப்பாணப் பிள்ளையள் 70 வீதமானோர் 40, புள்ளியள் கூட எடுக்கேல்ல எண்டு பேப்பரில போட்டிருந்தது.

கல்வியில கொடி பறக்க விட்ட எங்கட வாரிசுகள் ஒருக்கா வந்த பாதையைத் திரும்பீத்தான் பாக்க வேணும். கண்ட மாத்திரத்தில கொண்டை முடியிறதில்லை முன்னேற்றம் எண்டது.

# கொடுக்கிளாய் சக்திவேல் கால்பந்தாட்டத் தொடர் 2,3ஆம் நாள் ஆட்டங்களில் 5 அணிகள் வெற்றி

விளையாட்டுச் செய்திகள்

(வடமராட்சி கிழக்கு)

கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடாத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் மாலையும், நேற்றுக் காலையும் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டங்களில் ஐந்து அணிகள் வெற்றிபெற்றன.

இரண்டாம் நாள் போட்டியின் மாலை நேரப் போட்டி நேற்று முன்தினம் மாலை 3. 00 மணிக்கு ஆரம்பமானது.

இதில் முதலாவது போட்டியில் கட்டைக்காடு சென்மேரிஸ் ஏ அணியை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் 'பி' அணியும் மோதவிருந்த நிலையில் செந்தமிழ் 'பி' அணி சமூகம் கொடுக்கத் தவறியமையால் கட்டைக்காடு சென்மேரிஸ் 'ஏ' அணிக்கு வெற்றி கொடுக்கப்பட்டது.

இரண்டாவது போட்டியாக வத்திராயன் உதயசூரியன் 'ஏ' அணியை எதிர்த்து ஆழியவளை அருணோதய 'பி' அணி மோதவிருந்த நிலையில் ஆழியவளை அருணோதய 'பி' அணி சமூகம் கொடுக்கவில்லை. இதனால், உதயசூரியன் 'ஏ' அணிக்கு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மூன்றாவது போட்டியாக நாகர்கோவில் தமிழ் ஒளி அணியை எதிர்த்து நாகர்கோவில் நாகர்பதி அணி மோதியது.

இதில் தமிழ்ஒளி அணி நாகர்பதி அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மூன்றாம் நாள் போட்டி நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமானது. இதில் மணற்காடு சென் அன்ரனீஸ் 'ஏ' அணியை எதிர்த்து வத்திராயன் உதயசூரியன் 'பி' அணி மோதியது. இதில் ஆட்டம் தொடங்கி 15ஆவது நிமிடம் வரை போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

மணற்காடு சென் அன்ரனீஸ் அணியினர் தமது ஆட்டத்தை இன்னும் வேகப்படுத்தி சரியான முறையில் பந்தை முன்னே கொண்டு சென்று விளையாடியது.

இடைவேளைக்கு முன் 2 கோல்களைப் போட்டு சென் அன்ரனீஸ் அணி முன்னிலையில் இருந்தது.

மீண்டும் ஆட்டம் ஆரம்பமாகி மேலும் நான்கு கோல்களை போட்டு ஆட்ட முடிவில் மணற்காடு சென் அன்ரனீஸ் அணி வத்திராயன் உதயசூரியன் அணியை 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

இரண்டாவது போட்டியாக வத்திராயன் மத்தி அணியை எதிர்த்து மணற்காடு சென் அன்ரனீஸ் 'பி' அணி மோதியது. இதில் இரு அணிகளும் பல தடவைகள் கோல்கள் போட முயற்சித்தும் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை. பின்னர் வெற்றி தோல்வி சமநிலை உடைப்பு மூலம் தீர்மானிக்கப்பட்டது.

இதில் மணற்காடு சென் அன்ரனீஸ் 'பி' அணி வத்திராயன் மத்திய அணியை 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இன்று போட்டிகள் நடைபெறும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (38)

# முக்கோணத் தொடர் 3ஆவது போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

சென்றல் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்டுவரும் முக்கோணத் தொடரின் முக்கியமான போட்டி ஒன்றில் சென்றல் அணியும், யாழ். பல்கலைக் கழக அணியும் மோதவுள்ளன.

சென்றலின் தரப்படுத்தலில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளுக்கிடையிலான முக்கோண ஒரு நாள் போட்டியே நடாத்தப்பட்டு வருகின்றது.

இதன் முதலிரு போட்டிகளிலும் யாழ். பல்கலைக்கழகம் மற்றும் ஜொலிஸ்ரார் அணிகள் ஒவ்வொரு வெற்றிய்யப் பதிவாக்கியுள்ளன.

இந்நிலையில் நாளை சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் மூன்றாவது போட்டியில் சென்றல் அணியும், யாழ். பல்கலைக்கழக அணியும் மோதவுள்ளன.

இப்போட்டியில் அதிக ஓட்ட வித்தியாசத்தில் வெற்றிபெறும் பட்சத்திலேயே சென்றல் அணி சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெறும். இல்லையேல் தொடரிலிருந்து வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நாளை நடை பெறவுள்ள இப்போட்டி சென்றல் அணிக்கு முக்கியத்துவம் வாய்ந்த போட்டியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



வடமராட்சி துன்னாலை வடக்கு போதராமடம் முன்பள்ளி விளையாட்டு விழா கடந்த 15ஆம் திகதி வெகுசிறப்பாக நடைபெற்றது. இதில் சிறார்களின் பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பார்வையாளர்களைக் கவரும் வகையில் அமைந்திருந்தது.

# தீவக கால்பந்தாட்டத் தொடர் கிண்ணம் வென்றது றேஞ்சர்ஸ்

(யாழ்ப்பாணம்)

தீவகத்திற்கு உட்பட்ட விளையாட்டு அணிகளுக்கிடையில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் அணி கைப்பற்றியது.

இப்போட்டி தம்பாட்டி காந்திஜி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியும், ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் அணியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் இரு அணிகளுமே பரஸ்பரம் கோல் போடும் முயற்சியில் ஈடுபட்டன.

இருப்பினும் ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் அணி முற்பாதி ஆட்டத்தின் ஒரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது.

பிற்பாதி ஆட்டத்தில் பல வியூகங்கள் வகுத்து றேஞ்சறஸ் அணியின் கோல் போடும் முயற்சியைத் தடுக்க இருதயராசா அணி முற்பட்டது. இதனை முறியடித்து மீண்டும் ஒரு கோலை றேஞ்சர்ஸ் அணி போட்டுக் கொண்டது. இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (65)

# மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(தும்பளை)


தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தின் முன்னாள் வீரர் அமர் இ. பிரபாகரனின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் 11 வீரர்கள் பங்குபெறும் 15 பந்து பரிமாற்றம் கொண்ட மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதல் சுற்றுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாதனை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் காலை 8.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஸ்ரார் அணியை எதிர்த்து பருத்தித்துறை சென் மோதஸ் அணியும், பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் உபய கதிர்காமம் அணியை எதிர்த்து மாதனை அணியும் மோதவுள்ளன.

மேற்படி சுற்றுப் போட்டியில் பல முன்னணி அணிகள் பங்குபற்றுகின்றன என்றும், முதல் நாள் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டியைச் சிறப்பான முறையில் நடாத்த ஒத்துழைப்பு வழங்குமாறு போட்டி ஏற்பட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இப்போட்டித் தொடரில் இறுதிப் போட்டியில் ஆட்டநாயகன் விருதும், கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (62)

# இங்கிலாந்து, மேற்கிந்தியத் தொடரில் டி.ஆர்.எஸ்.முறை பயன்படுத்தத் திட்டம்




(புதுடில்லி)

இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கு எதிராக இந்தியாவில் நடைபெறும் தொடரில் டி.ஆர்.எஸ். முறையை பயன்படுத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) திட்டமிட்டு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஹவாக்-ஐ, ஹாட்ஸ்பொட், ஸ்னிக்கோ மீற்றர் தொழில் நுட்பத்துடன் டி.ஆர்.எஸ். முறை பயன்படுத்தப்படுகிறது. இதற்காக ஹாட்ஸ்பாட் கேமிராவுக்கு கிரிக்கெட் சபை ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. ஹாட்பாட் வசதிக்காக கூடுதலாக 6 கமராக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நியோ ஸ்போர்ட்ஸ் நிறுவனம் வழக்கமாக 38 கமராக்களை பயன்படுத்தும். தற்போது 42 கமராக் களை பயன்படுத்துகிறது. இதற்காக தினசரி ரூ.6.75 இலட்சம் கூடுதலாக செலவாகும். இந்த தொகையை கிரிக்கெட் சபை செலுத்தும். நவீன தொழில்நுட்பத்துடன் டி.ஆர்.எஸ். முறை இந்தியாவில் பயன்படுத்துவது இதுவே முதல் முறையாகும்

# முன்பள்ளி விளையாட்டு

(பருத்தித்துறை)

அல்வாய் பாரதிதாசன் முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை அதிபர் ந. தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. தில்லைநாதன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி வலய முன்பள்ளி இணைப்பாளர் திருமதி எஸ். சுதாஜினி, கரவெட்டி முன்பள்ளி இணைப்பாளர் திருமதி பா. கலைவாணி, கிராம அலுவலர் வே. தியாகராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (109)

# தோல்விக்கு பி.சி.சி.ஐ. பொறுப்பேற்க வேண்டும்

(லாகூர்)

இங்கிலாந்து தொடரில் இந்திய அணி படுதோல்வி கண்டதற்கும், முதலிடத்தை இழந்ததற்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) பொறுப்பு என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் முஷ்டாக் அகமது கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியது: இதுபோன்ற மோசமான போட்டி அட்டவணை திட்டமிடலுக்கு பி.சி.சி.ஐ.தான் மிகப்பெரிய பொறுப்பு. அவர்கள் கிரிக்கெட் வீரர்களை இயந்திரமாக நினைக்கிறார்கள். அதனால்தான் வீரர்களை இயந்திரங்களைப் போன்றே நடத்துகின்றனர். அவர்களை தினந்தோறும் விளையாடுமாறு கூறினால் எப்படி விளையாடமுடியும். அவர்களும் மனிதர்கள் தானே. அவர்கள் உடலளவிலும், மனதளவிலும் சோர்வடைந்துவிட்டனர். எனவே அவர்களுக்கு ஓய்வு தேவை.

இப்போது அவர்கள் கடுமையான சோர்வடைந்துள்ளனர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இதுவரை இந்தியா விளையாடி வந்துள்ள எல்லா ஆட்டங்களையும் பார்த்துள்ளேன். ஆனால் இப்போது வீரர்கள் சோர்வடைந்துள்ளதைக் காண முடிகிறது. இது ஆச்சரியமானமது மட்டுமல்ல, ஏமாற்றமானதும்கூட.

எந்தவொரு போட்டியாக இருந்தாலும் உற்சாகத்தோடு விளையாட வேண்டும். வீரர்கள் மனதளவிலும், உடலளவிலும் சோர்வடைந்துள்ளதை அவர்களின் முகங்களில் காண முடிகிறது. அதனாலேயே அவர்களால் இங்கிலாந்துக்கு பதிலடி கொடுக்க முடியவில்லை.


குறிப்பாக பந்துவீச்சாளர்கள் அதிகமான அளவில் பந்துவீசி களைப்படைந்துவிட்டனர்.

அவர்கள் மேற்கிந்தியத் தீவுகளில் இருந்து நேரடியாக இங்கிலாந்துக்கு வந்துவிட்டனர். இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்காக எவ்வித பயிற்சி மேற்கொள்ளவில்லை.

இந்திய அணி ஒரே ஒரு பயிற்சி ஆட்டத்தில் மட்டும் விளையாடிவிட்டு டெஸ்ட் போட்டியில் விளையாடியதும் துடுப்பாட்டக்காரர்கள் ரன் குவிக்க முடியாமல் போனதற்கு ஒரு காரணம். இங்கிலாந்து போன்ற பெரிய அணிகளுக்கு எதிரான தொடரில் விளையாடும்போது, போதிய பயிற்சி இல்லாவிடில் அது தோல்வியில்தான் முடியும். அதுதான் இப்போது இந்திய அணிக்கு நடந்துள்ளது என்றார்.

# சின்சினாட்டி ரென்னிஸ் தொடர் காலிறுதியில் நடால், பெடரர்





(சின்சினாட்டி)

சின்சினாட்டியில் நடைபெறும் ரென்னிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் நடால், சுவிஸ் பெடரர், அன்டி முர்ரே ஆகியோர் காலிறுதிக்குத் தகுதி பெற்றனர். சக வீரரான வெர்டாஸ்கோவை எதிர்கொண்ட நடால், பலமான சவாலை எதிர்கொண்டார். இருப்பினும் இறுதியில் நடால் 7- 6 (5), 6- 7 (4), 7- 6 (9) என்ற செட்களில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

அமெரிக்க வீரர் ஜேம்ஸ் பிளேக்கை சந்தித்த பெடரர் அவரை 6- 4, 6- 1 என்று 54 நிமிடங்களில் ஊதித் தள்ளி காலிறுதிக்குத் தகுதிபெற்றார்.

நோவக் ஜோகோவிச், ராடெக் ஸ்டெபானெக்கை 6- 3, 6- 3 என்ற செட்களில் வீழ்த்தினார். ஆண்டி முர்ரே, ரஷ்ய வீரர் பகமோலவை வீழ்த்தினார். இதேவேளை, ஆண்கள் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி முன்னேறியது. ஸ்பெயினின் ரபெல் நடால், மார்க் லோபஸ் ஜோடியை சந்தித்த இந்த ஜோடி 6-4, 6-2 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

# சட்டவிரோத சொத்துக்குவிப்பு வழக்கு குற்றச்சாட்டிலிருந்து மலிக் விடுதலை


(லாகூர்)

சட்ட விரோதமாக சொத்துக் குவித்ததாக எழுந்த குற்றச்சாட்டில் இருந்து பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொகைப் மலிக் விடுவிக்கப்பட்டுள்ளார். இதனால் அவர் மீண்டும் அணிக்குத் திரும்புவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றிருந்த சல்மான் பட் உள்ளிட்ட மூன்று வீரர்கள் சூதாட்டப் புகாரில் சிக்கினர். இதையடுத்து வீரர்கள் தங்களின் சொத்துக் கணக்கு மற்றும் வங்கிக் கணக்குகள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்குமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டது.

அப்போது பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் மலிக், வெளிநாட்டு வங்கிகளில் பணம போட்டிருப்பது தெரியவந்தது. இதுதொடர்பாக அவரிடம் விளக்கம் கேட்கப்பட்டபோது, அவர் உரிய பதிலை அளிக்கவில்லை. இதையடுத்து அவருக்கு கிரிக்கெட் விளையாட தடைவிதிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசாரணையின் போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஒருங்கிணைந்த சபை முன்பு ஆஜரான மலிக், உரிய ஆவணங்களை சமர்ப்பித்



தார். இதையடுத்து அவர் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

மலிக் உரிய ஆவணங்களை சபையிடம் அளித்தார். அதை ஆராய்ந்தபோது அதில் எவ்வித குற்றச்சாட்டுக்கும் இடமில்லை என்பது தெரியவந்ததையடுத்து அவர் விடுவிக்கப்பட்டார் என சபை தெரிவித்துள்ளது. குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டதன் மூலம் மீண்டும் அணிக்கு திரும்பவுள்ளார். மூத்த வீரர்களின்றி தடுமாற்றம் கண்டு வரும் பாகிஸ்தான் அணிக்கு மலிக் திரும்பும் பட்சத்தில் அது அந்த அணிக்கு பலம் சேர்க்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# விலகினார் கிளிஜ்டர்ஸ்



(மாசோன்)

வயிற்றில் ஏற்பட்ட தசைப்பிடிப்பால் அவதிப்பட்டு வரும் முன்னணி வீராங்கனை பெல்ஜியத்தின் கிம் கிளிஜ்டர்ஸ் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர் எதிர்வரும் 29ஆம் திகதி நியூயோர்க்கில் ஆரம்பமாகவுள்ளது.

இத்தொடரின் நடப்பு சம்பியனான 28 வயதான கிளிஜ்டர்ஸ் மூன்று முறை அமெரிக்க ஓப்பனை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தொடரிலிருந்து விலகியமை மிகுந்த ஏமாற்றத்தைத் தருவதாக கிம் கிளிஜ்டர்ஸ் தெரிவித்தார்.

# தோல்வியை உணர்ந்தவர்கள் போல் பயிற்சியில் ஈடுபடும் இந்திய வீரர்கள்

## கிண்டலடிக்கிறார் பிளின்டொப்

(லண்டன்)

இந்திய அணியினர் ஆட்டத்துக்கு முன்னரே தோல்வியை உணர்ந்தவர்கள் போல் மந்தமாக பயிற்சி செய்வதை காண முடிந்தது. அவர்கள் உடற் தகுதியுடன் இல்லை என்பதை இது காட்டுகிறது. இதுவே அதன் தோல்விக்கு முக்கிய காரணம் என இங்கிலாந்து அணியின் முன்னாள் சகலதுறை வீரர் பிளின்டொப் தெரிவித்தார்.

தற்போதைய இங்கிலாந்து அணி நல்ல நிலையில் உள்ளது. சில இந்திய அணி வீரர்கள் உடல் பருத்து காணப்படுகிறார்கள். இரு அணிகளும் பயிற்சியில் ஈடுபட்டதை நான் பார்த்தேன். இங்கிலாந்து அணியினர் தீவிர பயிற்சியில் சுறுசுறுப்பாக ஈடுபடுகின்றனர்.

ஆனால் இந்திய அணியினர் ஆட்டத்துக்கு முன்னரே தோல்வியை உணர்ந்தவர்கள் போல் மந்தமாக பயிற்சி செய்வதை காண முடிந்தது. அவர்கள் உடற் தகுதியுடன் இல்லை என்பதை இது காட்டுகிறது.

இங்கிலாந்து அணியினர் தொழில் ரீதியான ஆட்டத்தை வெளிப்படுத்துகிறார்கள். இங்கிலாந்து அணியினர் டைவிங் அடித்து பீல்டிங் செய்கின்றனர். இந்திய அணியில் விக்கெட் கீப்பர் உட்பட பலரும் பிடியை கோட்டை விடுகின்றனர். அந்த அணியின் பீல்டிங்



படுமோசமாக உள்ளது. இந்திய அணியின் ஆட்டத்தை பார்த்து பயிற்சியாளர் பிளட்சர் நிச்சயம் தலையை பிய்த்துக் கொண்டு தான் இருப்பார்.

எனவே, இந்திய அணியின் தொடர் தோல்விகளிலிருந்து மீள்வதற்கு அதன் சொந்த நாட்டில் தான் சாத்தியமாகும். அதுவரைக்கும் அவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி வரும் எனவும் அவர் தெரிவித்தார்.

# நுழைவுச் சீட்டுப் பெற ரசிகர்கள் முண்டியடிப்பு

(கொல்கத்தா)

அர்ஜென்ரீன நட்சத்திர கால்பந்து வீரர் மெஸ்ஸி கொல்கத்தாவில் நடைபெறவுள்ள நட்புறவுப் போட்டி ஒன்றில் ஆடவுள்ளமையால், இப்போட்டிக்கான நுழைவுச் சீட்டுக்களைப் பெறுவதில் ரசிகர்கள் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அர்ஜென்ரீனா-வெனிசுலா அணிகள் இடையே நட்புறவு கால்பந்து போட்டி கொல்கத்தா சால்ட் லேக் மைதானத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அர்ஜென்ரீன அணியின் நட்சத்திர வீரரும், பார்சிலோனா கழக நட்சத்திர வீரருமான மெஸ்ஸி தலைமையில் களம் இறங்கும் என்று அதன் புதிய பயிற்சியாளர் அலெக்ஜான்ட்ரோ சபெல்லா தெரிவித்துள்ளார்.

அதே சமயம் முன்னணி வீரர் கார்லஸ் டெவிசுக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை. கொல்கத்தாவில் கால்பந்துக்கு எப்போதும் பலத்த வரவேற்பு இருக்கும். அதுவும் மெஸ்ஸி வருவதால் போட்டியை நேரில் கண்டு களிக்க ரசிகர்கள் அதீத ஆர்வம் கொண்டுள்ளனர்.

இதனால் போட்டிக்கான நுழைவுச் சீட்டைப் பெற்றுக் கொள்வதில் ரசிகர்கள் நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# டெஸ்டில் முதல் நாளில் பந்துவீச இந்திய வீரர்களுக்குத் தெரியாதாம்




(லண்டன்)

டெஸ்டில் முதல் நாளில் முதல் ஓவரை எப்படி வீச வேண்டும் என்பதே இந்திய அணியின் பந்து வீச்சாளர்களுக்குத் தெரியவில்லை என முன்னாள் வீரர்களான இயன் போத்தம், வசீம் அக்ரம், ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது குறித்து இங்கிலாந்தின் முன்னாள் பந்து வீச்சாளர் இயன் போத்தம் கூறுகையில், ஓவல் டெஸ்டின் முதல் நாளில் முதல் ஓவரை இந்தியாவின் ஆர்.பி.சிங் மிக மோசமாக வீசி னார். டெஸ்ட் வரலாற்றிலேயே மோசமாக வீசப்பட்ட முதல் ஓவர் இதுதான் என்றார்.

இதேபோல, பாகிஸ்தானின் வசிம் அக்ரம் குறிப்பிடுகையில், டெஸ்டில் முதல் ஓவரை எப்படி வீசவேண்டும் என்று தெரியாதவர்களை எல்லாம் அணியில் உள்வாங்கினால் தோல்வியைத் தவிர வேறு என்ன மிஞ்சும் என்றார்.

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் டொனால்டும் ஆர்.பி.சிங்கின் பந்து வீச்சுக்கு கண்டனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்குப் பதிலளித்த ஆர்.பி. சிங், முதல் நாளில் சற்று பதற்றமாக இருந்ததால் சரியாக பந்து வீச முடியவில்லை என்றார்.

# பங்களாதேஷ் ஆறுதல் வெற்றி

(புலவாயோ)


சிம்பாப்வே அணிக்கெதிரான நான்காவது ஒரு நாள் போட்டியில் பங்களாதேஷ் அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று ஆறுதல் அடைந்தது.

இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது ஒரு நாள் போட்டி புலவாயோவில் நேற்று முன்தினம் நடந்தது.

முதலில் ஆடிய சிம்பாப்வே அணி 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் பிரன்டன் டெய்லர் சதம் (106 ரன்) அடித்த போதிலும் சிம்பாப்வே அணியால் 200 ரன்களை கூட தொட முடியவில்லை. அந்த அணி கடைசி 6 விக்கெட்டுகளை வெறும் 17 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது குறிப்பிடத்தக்கது. பந்து வீச்சில் ருபெல் ஹுசைன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய பங்களாதேஷ் அணி 36.4 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. தமிம் இக்பால் 61, ஷகிப் அல்-ஹசன் 39 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஏற்கனவே தொடரை வென்ற சிம்பாப்வே அணி, ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் 3-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. 5ஆவது போட்டி இன்று நடைபெறவுள்ளது.



# சுற்றுலா விசாவில் செல்லும் இலங்கையர் மலேசியாவில் சட்டவிரோத நடவடிக்கை



(கொழும்பு)

சுற்றுலா விசாக்களின் மூலம் மலேசியா செல்லும் இலங்கையர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாலியல் தொழில் உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் இலங்கையர்கள் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான தொழில் முகவர் நிறுவனங்களின் ஊடாக பயணம் செய்வோரே இவ்வாறு பாதிக்கப்படுகின்றனர்.

சட்ட ரீதியாக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் இவ்வாறு சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

சிங்கப்பூரிலும் இந்த நிலைமை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா மலேசியாவிற்கு விஜயம் செய்துள்ள நிலையில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளார்.

மலேசியாவில் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பதிவு செய்யப்பட்டாத வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களின் ஊடாக மலேசியாவிற்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்ல வேண்டாம் என அமைச்சர் டிலான் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

# தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அரசசேவைக்கு தொழிலாளர் இணைப்பு

## குற்றம் சுமத்துகிறது பவ்ரல்

(கொழும்பு)

அரசாங்கம் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுவதாக பவ்ரல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. கொழும்பு மாநகரசபையில் கடமையாற்றுவதற்காக 200 தொழிலாளர்களை இணைத்துக் கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடாது என தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்படும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரொஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் 50 தொழிலாளர்களுக்கு ஏற்கனவே நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுத்துறை சேவைக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை விமர்சனம் செய்ய முடியாது எனினும், தேர்தல் இடம்பெறும் பிரதேசங்களில் இவ்வாறு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்பதே தமது நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கொலன்னாவ மற்றும் நீர்கொழும்பு ஆகிய மாநாகரசபைகளுக்கு உட்பட்ட வலயங்களில் கூடுதலான தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# மேற்குலகத்தின் இரட்டை வேடத்தை அரசாங்கம் முறியடிக்க தவறிவிட்டது

## சட்டத்தரணி கோமின் தயாசிறி

(கொழும்பு)


**ஐ.நா நிபுணர்குழு அறிக்கை, சனல்-4 ஆவணப்படம் ஆகியவற்றை வைத்துக் கொண்டு இலங்கையைத் தனிமைப்படுத்த முனையும் மேற்குலகின் இரட்டை வேடத்தை அனைத்துலக மட்டத்தில் அம்பலப்படுத்த இலங்கை அரசாங்கம் தவறி விட்டதாக பிரபல சட்டவாளரும், சிங்களத் தேசியவாதியுமான கோமின் தயாசிறி குற்றம்சாட்டியுள்ளார்.**

இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுக்களை முறியடிக்க சிங்களத் தேசியவாத அமைப்புகளின் சார்பில் இணையத்தளம் ஒன்றை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் கைதான சந்தேகநபர்கள் சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பாக விசாரணைகளை நடத்த மறுக்கின்ற பிரித்தானியா, நிபுணர்குழு அறிக்கையை வைத்துக் கொண்டும், சனல்-4 ஆவணப்படத்தை வைத்துக் கொண்டும் டிசம்பர் 31ஆம் நாளுக்குள் விசாரணை நடத்தத் தவறினால் அனைத்துலக நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுபற்றியெல்லாம் லண்டனில் உள்ள இலங்கை தூதரகம் கண்டு கொள்ளாதிருப்பது குறித்தும் அவர் கடும் கண்டனம் தெரிவித்தார்.

பின்லேடன் உள்ளிட்ட அல்ஹைதாவினை அமெரிக்க சீல் படையினர் நீதிக்குப் புறம்பாக படுகொலை செய்தது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஒபாமா நிர்வாகம் இன்னமும் பதிலளிக்காத நிலையில், இலங்கை மீது போர்க்குற்ற விசாரணைக்கு அமெரிக்கா அழைப்பு விடுக்கின்றது என்றார்.



பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வீதிச்சட்டங்களை மீறுவோரின் சாரதி அனுமதிப்பத்திரம் ரத்தாகும்

(கொழும்பு)

வீதிச் சட்டங்களை மீறும் வாகன சாரதிகளின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கான திட்டமொன்றை தயாரிப்பதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமைச்சு மட்டத்திலான பேச்சுவார்த்தை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் பி.டி.எல்.தர்மப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் திணைக்களம் மற்றும் நீதி அமைச்சுடன் இணைந்து உத்தேச திட்டத்தை செயற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# போர்க்குற்றச்சாட்டுக்களை முறியடிக்க இணையத்தளம்

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் இலங்கை அரசிற்கு எதிராக எழுந்துள்ள யுத்த வன்முறை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் இணையத்தளத்தினை இலங்கை அரசு நேற்றுமுன்தினம் அறிமுகஞ் செய்து வைத்தது. இந் நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இது யுத்த வன்முறை சதித்திட்டங்களை தோற்கடிப்போம் என்ற தலைப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த இணையத்தளத்தளம் அவுட் ஒப் வோ டொட் கொம் என பெயரிடப்பட்டுள்ளது.

இவ் இணையத்தளத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளராக எஸ்.எல் குணசேகர கடமையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# படையினரின் வணிக நடவடிக்கைகள் சமூகத்தை இராணுவ மயமாக்கும் ஆபத்து

## எச்சரிக்கிறது நியூசிலாந்து ஊடகம்

(கொழும்பு)

தெற்காசியாவில் இலங்கை உள்ளிட்ட நாடுகளின் ஆயுதப்படைகள் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது, குடியியல் சமூகத்தை இராணுவ மயப்படுத்தும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளதாக நியுசிலாந்து ஊடகம் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

"நியுசிலன்ட் ஹெரால்ட்" என்ற ஊடகத்தில் ராகுல் பேடி என்பவர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில், இலங்கை, இந்தியா,பாகிஸ்தான்,பங்களாதேஷ் போன்ற நாடுகளின் இராணுவத் தலைமைகள் விமானசேவைகள் தொடக்கம் சீனித் தொழிற்சாலைகள் வரைக்கும், வங்கிகள் தொடக்கம் வெதுப்பகங்கள் வரைக்கும், மின் ஆலைகள் தொடக்கம் துறைமுகங்கள் வரைக்கும் முதலீடுகளைச் செய்து கொண்டிருக்கின்றன.

இராணுவ உயர்மட்டத்தின் கட்டுப்பாட்டில் பில்லியன் கணக்கிலான டொலர் முதலீடுகள் மேற்கொள்ளப் படுவது, குடியியல் அதிகாரத்தை மறைப்பதாக இருக்கின்றது.

தெற்காசியாவிலேயே மிகவும் இராணுவ மயப்படுத்தப்பட்ட நாடாக இலங்கையைக் குறிப்பிடலாம் அங்கு பத்து இலட்சம் மக்களுக்கு 8000இற்கும் அதிகமான ஆயுதப்படையினர் என்ற விதத்தில் உள்ளனர்.

போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் மூன்று இலட்சம் ஆயுதப்படையினரை கொண்டுள்ள இலங்கையில் அரசாங்கம் மரக்கறிகள் விற்பனை, பயண முகவரகங்கள்,விடுதிகள்,நெடுஞ்சாலை உணவகங்கள், குப்பை சேகரிப்பு போன்ற தொழில்களில் படையினரை ஈடுபத்துவதில் ஆர்வம் காட்டுகின்றது.

வடக்கில் 22 அறைகளைக் கொண்ட விடுதி ஒன்றை இலங்கை இராணுவம் நிர்வகித்துவருகின்றது. படகுச் சேவைகள் மற்றும் திமிங்கலக் காட்சிப் பயணங்களை கடற்படை ஒழுங்கு செய்வதாகவும் அந்த கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

இராணுவ முகாம்களில் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சிகள் அளிக்கப்பட்டதையும் "நியுசிலன்ட் ஹரால்ட்" சுட்டிக்காட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை உயர்நீதிமன்றத்தால் 5 சீனர்களுக்கு மரண தண்டனை

(கொழும்பு)

ஐந்து சீனர்களுக்கு இலங்கை உயர் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

2003ம் ஆண்டு சீனர் ஒருவரை படுகொலை செய்த குற்றத்திற்காக குறித்த ஐந்து சீனர்களுக்கும் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தெஹிவளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், தனிப்பட்ட குரோதம் காரணமாக கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சீனர்கள் ஏற்கனவே சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இருவர் தலைமறைவாக வாழ்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தலைமறைவாக வாழும் இருவரையும் கைது செய்யுமாறு நீதிமன்றம் காவல்துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# அழகுசாதன எச்சரிக்கை

(கொழும்பு)

அழகுசாதனப் பொருட்களை உபயோகிக்கும் போது அவை தொடர்பாக அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.இந்த அறிவுறுத்தலை அழகுசாதன வைத்திய பொருட்கள் மற்றும் ஔடத அதிகார சபை பணிப்பாளர் சரத் ஹேமந்த பெனரகம விடுத்துள்ளார்.

அழகுசாதன பொருட்கள் பயன்படுத்தப்படுகின்ற அழகுசாதன நிலையங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.அழகுசாதன நிலையங்களில் பயன்படுத்தப்படுகின்ற அழகுசாதன பொருட்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றது

## மனித உரிமைகள் ஆய்வு இல்லத் தலைவர்

(கொழும்பு)

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளாந்தம் இலங்கையில் அதிகரித்து வருகிறது. இது தொடர்பில் நீதியை நிலை நாட்ட வேண்டிய நிறுவனங்கள் ஏன் அமைதியாய் இருக்கின்றன என மனித உரிமை ஆய்வுகளுக்கான இல்லத்தின் தலைவர் செரின் சேவியர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பெண்கள் பாரியளவு பாதிப்புக்குள்ளாகி வரும் கிறிஸ் பூதங்கள் தொடர்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை பெண்களுக்கான ஊடக சேகரிப்பு இயக்குனர் குமுதினி சாமுவேல, செபாலி கொட்டகொட, ரோஹினி விஜேயசிங்க ஆகியோரும் இதன் போது கருத்துத் தெரிவித்தனர்.

கிறிஸ் பூதங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ரோஹினி விஜேயசிங்க,

கஹவத்தையில் இரண்டு வயோதிபப் பெண்களின் கொலையை அடுத்து பெண்களுக்கெதிராக விளைவிக்கப்படும் வன்முறைகள் தொடர்பில் பாரியளவிலான பேச்சுக்கள் இன்று பரவலாக எழுந்துள்ளன.

குறிப்பாக கஹவத்தையில் 2006ஆம் ஆண்டிலிருந்தே பெண்கள் கொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

அப்பகுதியில் நீதி உண்மையில் செயற்பட்டிருந்தால் இன்று அப்பகுதியில் அதிகரித்துள்ள பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறைந்திருக்கும்.

நீதியை நிலை நாட்ட வேண்டிய பொலிஸார் என்ன செய்கின்றனர் என வினா எழுப்ப வேண்டிய நிலையில் நாம் உள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# நாட்டின் பதற்ற சூழ்நிலைக்கு அரசாங்கமே முழுக் காரணம்

## நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற சூழ்நிலைக்கு அரசாங்கமே முழுக் காரணம் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

காவல்துறையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறும் நிலைமை நாட்டில் தோன்றியுள்ளது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் கல்வியைத் தொடர முடியவில்லை, புனித ரம்ழான் மாதமாகையால் முஸ்லீம் கிராமங்களில் மக்கள் மத மற்றும் கலாச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காக அரசாங்கம் இவ்வாறான பீதியை ஏற்படுத்தி வருவதாக பலரும் கருதுகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கருத்து வெளியிட்டுள்ளார்.

அனைத்து மாவட்டங்களிலும் இராணுவ முகாம்களை அமைக்கும் நோக்கத்துடன் அரசாங்கம் இத்தகைய அச்சகரமான சூழ்நிலையை உருவாக்கி நாட்டினுள் இராணுவ ஆட்சியை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதாகவும் குற்றம் சுமதப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தொடர்சொற்பொழிவை நிகழ்த்திய குமரனுக்கு பட்டம் வழங்கி கௌரவிப்பு



(கொழும்பு)

அளவெட்டி பத்தானை ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவப் பெருந்திருவிழாவில்


14 தினங்களாக திருவாசகத் திருமருந்து எனும் தொடர் சொற்பொழிவை நிகழ்த்திய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர்

எஸ்.ரி.குமரனுக்கு செஞ்சொல்வேந்தன் என்னும் பட்டம் ஆலய பரிபாலன சபையினரால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

அலங்கார உற்சவத்தின் இறுதித் தினத்தன்று பரிபாலன சபைத தலைவரும் கிராமிய வலுப்படுத் தலுக்கான இணையத்தின் தலைவருமான எஸ்.முருகையா தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் ஆலயத்தின் பிரதம குரு சிவசிறி வெ.பஞ் சலிங்கக் குருக்களினால் இப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது. இந்நிகழ்வில் சொற் பொழிவில் கூறப்பட்ட விடயப் பரப்பிற்குள் மாணவர்கள் பெரியோர்களிடையில் நடதப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டது.

# பொலிஸாரிடம் ஒப்படைத்த மர்ம மனிதர்களின் விபரங்கள் ஏன் வெளியிடப்படவில்லை

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கேள்வி



(கொழும்பு)

பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட மர்ம மனிதர்களின் விபரங்கள் இதுவரை ஏன் வெளியிடப்படவில்லை என்று தேசிய நல்லிணக்க மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பியுள்ளார்.

சிலர் துரத்தி வரு கையில் தன் உயிரைக் காப்பாற்றிக கொள்ள சாதாரண ஒரு வரும் பொலிஸ் நிலையத்திலேயே தஞ்சமடைவார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்களின் மனதில் பீதியைக் கிளப்பிவிட்டுள்ள மர்ம மனிதர்கள் பல்வேறு அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மர்ம மனிதர்களின் தாக்குதலுக்கு உள்ளான பலர் உயிரிழந்துள்ளனர். பல சந்தர்ப்பங்களில் மர்ம மனிதர்கள் பொது மக்களின் கைகளில் சிக்கியுள்ளனர்.

மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்ட மர்ம மனிதர்கள் கொல்லப்பட்ட சம்பவங்களும்,பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவங்களும் அண்மையில் இடம் பெற்றன.

இந்நிலையில் அவ்வாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட மர்ம மனிதர்களின் விவரங்கள் ஏன் இதுவரை வெளியிடப்படவில்லை?

அத்துடன் கொல்லப்பட்ட மர்ம மனிதர்களின் விவரங்கள் எங்கே? ஏன் இவர்கள் தொடர்பான விவரங்கள் வெளியிடப்படாதுள்ளன?

மக்களால் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட மர்ம மனிதர்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டால் அவர்களை ஏவி விட்டவர்கள் தொடர்பான விவரங்கள் வெளியாகும்.

ஆனால் ஏன் விவரங்கள் வெளியிடப்படாதுள்ளன? எனவே மக்கள் மனதில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன என்றார்.

# பாலியல் துஷ்பிரயோகம் கைதானார் தேரர்

(கொழும்பு)

சிறுவர் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றஞ்சுமத்தப்பட்டிந்த மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாரதிபதி நாமல் வெவே ரதனசார தேரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்பியுள்ள போதே ரகசிய காவற்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் இவர் வெளிநாடு சென்றிருந்தார்.

இந்தநிலையிலேயே இவரை கரகசிய காவற்துறையினர் கைது செய்துள்ளனர்.

# இளவயதுக் கர்ப்பங்கள் குடாநாட்டில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் இந்த வருடத்திற்கான முதல் அரையாண்டுகாலப்பகுதியில் இளவயதுக் கர்ப்பங்கள் 75எனவும், திருமணமாகாமல் கர்ப்பம் தரித்தவர்கள் 43பேரெனவும் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் திரட்டப்பட்டதகவல்களின் அடிப்படையில் மேற்படி விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

உடுவில்,சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் இளவயதில் கர்ப்பமடைந்தவர்கள் 16,யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 13,சண்டிலிப்பாயில் 10,பருத்தித்துறையில்9,கோப்பாயில்7, ஊர்காவற்றுறை மற்றும்,சங்கானையில் இருவர் என இவ்வாறு அடையாளம் காணப்பட்டு மொத்தமாக 75பேர் உள்ளனர்.

இதேபோன்று திருமணமாகாமல் கோப்பாயில் 17,பேர் சாவகச்சேரி மற்றும் சண்டிலிப்பாயில் அறுவர்,சங்கானையில் நால்வர் ஊர்காவற்றுறை மற்றும் நல்லூரில் மூவர் உடுவில் மற்றம் பருத்தித்துறையில் இருவரென கர்ப்பமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# குடாநாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இந்த மாதத்தில் சடுதியாக அதிகரிப்பு

## 19ஆம் திகதிவரை 1இலட்சத்து 40ஆயிரம் பேர் வருகை



(யாழ்ப்பாணம்)

இந்த மாதத்தின் நேற்று முன் தினம் மாலை வரையான காலப் பகுதிக்குள் யாழ்.குடாநாட்டுக்கு தென்பகுதியில் இருந்து ஒரு இலட்சத்து 40ஆயிரத்துக்கும் அதிகமான உல்லாசப்பயணிகள் வருகை தந்துள்ளதாக யாழ்ப்பாண பாதுகாப்பு படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஆனையிறவில் உள்ள படையினரின் பதிவகத்தில் இந்தத் தொகை பதிவாகி இருப்பதாக மேலும் தெரிவித்துள்ளது.

பாடசாலை இரண்டாம் தவணை விடுமுறை மற்றும் ஆலயத் திருவிழாக்களை முன்னிட்டே இந்தத் திடீர் அதிகரிப்பு காணப்பட்டுள்ளது.

வடக்கின் பல இடங்களையும் பார்வையிட வரும் இவ் உல்லாசப் பயணிகள் குறிப்பாக நயினாதீவு நாகதீபம்,யாழ்டச்சுக்கோட்டை,யாழ்ப்பாணம் நாகவிகாரை,நல்லூர் முருகன் ஆலயம்,பருத்தித்துறை ஆகிய பகுதிகளுக்கு சுற்றுலாவாகச் சென்று வருகின்றனர். எனவும் பாதுகாப்பு படை தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் இருந்து கல்வி அதிகாரிகளின் தலைமையில் பாடசாலை மாணவர்கள் தென் பகுதிக்கு சுற்றுலாப்பயணங்களை மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



பருத்தித்துறையிலுள்ள 521ஆவது படைப்பிரிவினரால் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நாகர்கோவில் பகுதி மக்களுக்கு கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக,விளக்கமளிக்கப்படுவதனைக் காணலாம்.

# மன்னாரில் பொழுது போக்குப் பூங்கா அமைக்கும் பணி இடைநிறுத்தம்



(கொழும்பு)

மன்னார் பிரதான பாலத்திற்கு அருகாமையில் பொழுது போக்கு பூங்கா அமைக்கப்பட்டு வந்த காணி வன விலங்கு சரணாலயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தல் பலகை நாட்டப்பட்டதையடுத்து அங்கு பொதுழுதுபோக்கு பூங்கா அமைக்கும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

மேற்படி இடம் கடல் சார்ந்த பிரதேசசமாக காணப்படுவதினால் மாலை நேரங்களில் பல நூற்றுக்கணக்கான மக்கள் பொழுது போக்கிற்காக அவ்விடத்திற்கு வந்து செல்லுவது வழமை.

இந்நிலையில், அங்கு பூங்கா அமைப்பற்கு மன்னார் நகரசபையின் ஏற்பாட்டில் வடமாகண ஆளுநரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மன்னார் இராணுவ கட்டளையிடும் அதிகாரியின் தலைமையில் முதற்கட்டப் பணிகள் இடம் பெற்று வந்தன.

எனினும் குறித்த இடம் முழுவதும் வன விலங்கு சரணாலயத்திற்கு ஒதுக்கப்பட்டாதாகவும் அதில் எவ்விதமான கட்டுமானப்பணிகளும் மேற்கொள்ள முடியாது எனவும் கடந்த புதன் கிழமை அறிவித்தல் பலகை இடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வட மாகாண ஆளுனர் ஜீ.ஏ.சந்திர சிறியினால் ஒதுக்கப்பட்ட நிதியினை அவர் மீளப்பெற்றதாக முதற்கட்டப்பணிகளை மேற கொண்டு வந்த இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மைத்திரி டயஸ் தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த பிரச்சினை தொடர்பாக மன்னார் நகர சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அணைவரும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகனை சந்தித்து இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடினர். இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று சாதகமான பதிலை பெற்றுத்தருவதாக உறுதியளித்ததாக மன்னார் நகரசபையின் உறுப்பினர் ஆர்.குமரேஸ் தெரிவித்தார்.

# 3 மாடிக் கட்டடத்திற்கு அடிக்கல்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு மூன்று மாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

வடக்கின் வசந்தம், என்றிப் திட்டத்தின் கீழ் 2 கோடி 50 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இக்கட்டத்திற்கான அடிக்கல்லை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) நாட்டி வைத்தார்.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும், ஓய்வுபெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான சி.சிவராசா, ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (109)

# பொய்யான வதந்திகளை பரப்பும் திருடர்கள் குறித்து விழிப்பாக இருக்கவும்

## கிளி.மாவட்ட பொலிஸ் அதிகாரி

(முரசுமோட்டை)

மக்கள் மத்தியில் பொய்யான வதந்திகளை பரப்பிவிட்டு திருடர்கள் தமது கைவரிசையை காட்டி வருகின்றனர். எனவே இந்த விடயம் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட மக்கள் தொடர்பாடல் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எல். அடிவ்பீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக மக்களுக்கு அறிவித்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல்வேறு இடங்களில் பல வதந்திகள் பரப்பப்பட்டுவருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் அப்படியான வதந்திகள் இல்லை.

எனினும் கடந்த ஓரிரு நாட்களாக கிளிநொச்சி அக்கராயன் பகுதிகளிலுள்ள சில இடங்கில் வதந்திகள் பரப்பப்பட்டு மக்களை பீதியடைய வைக்கும் வகையில் சில ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக நீண்டகால யுத்தத்தின் பின்னர் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் இந்த சமாதானத்தை சீர்குலைக்கும் வகையில் சில விஷமிகள் திட்டமிட்ட வகையில் செயற்பட்டு வருகின்றார்கள்.

இந்த விடயத்தில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் வதந்திகள் பரப்பப்பட்டால் அது தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றால் அதனை உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (110)

# நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு



## தினமுரசு நாளிதழ் நடத்தும்

## மாபெரும் பொது அறிவுப் போட்டி

பங்குபற்றுங்கள்! பரிசுகளை அள்ளுங்கள்

1. பொதுவாக ஒருவரின் சொந்த நாட்டை தாய்நாடு என்றே அழைப்பர். ஆனால் அதை 'தந்தையர் நாடு' என அழைத்தவர் யார்?
1) திருவள்ளுவர் 2) பாரதியார்
3) பாரதிதாசன் 4) நீலாவணன்

2. ஈழத்தில் 'மஹாகவி' என்ற புகழ்பெற்ற தமிழ்க் கவிஞரின் இயற்பெயர் என்ன?
1) சின்னத்துரை 2) சுப்பிரமணியம்
3) உருத்திரமூர்த்தி 4) சோமசுந்தரம்

3. தமிழ் செம்மொழி மாநாட்டு பாடலை எழுதியவர் யார்? அதற்கு இசையமைத்தவர் யார்?
1) சுந்தரம்பிள்ளை, எம்.எஸ்.விஸ்வநாதன்
2) அண்ணாத்துரை, எம்.பி.சீனுவாசன்
3) பாரதிதாசன், இளையராஜா
4) கருணாநிதி, ஏ.ஆர்.ரஹ்மான்

4. மல்லிகை பத்திரிகை ஆசிரியர் யார்? அவர் எழுதிய எந்த நூலுக்கு சிறிலங்கா சாகித்திய மண்டல விருது கிடைத்தது?
1) டொமினிக் ஜீவா, தண்ணீரும் கண்ணீரும்
2) ஞானசேகரம், குருதிமலை
3) தெளிவத்தை ஜோசப், காலங்கள் சாவதில்லை
4) செ. கணேசலிங்கன், சடங்கு

5. தங்கத் தாத்தா என அழைக்கப்பட்ட ஈழத்து கவிஞர் யார்?
1) விபுலானந்தர் 2) குமாரசாமிப் புலவர்
3) சோமசுந்தரப் புலவர் 3) ஆறுமுக நாவலர்

6. பன்னிரு திருமுறைகள் எத்தனையாம் நூற்றாண்டில் எநத மன்னனின் ஆட்சியில் தொகுக்கப்பட்டது?
1) 10 ஆம் நூற்றாண்டு, ராஜராஜசோழன்
2) 07 ஆம் நூற்றாண்டு, மகேந்திர பல்லவன்
3) 14 ஆம் நூற்றாண்டு, குலசேகர பாண்டியன்
4) 16 ஆம் நூற்றாண்டு, கிருஷ்ண தேவராயர்

7. ஆறுமுகநாவலர் அவர்கள் யாருடைய வேண்டுதலின் பெயரில் 'பைபிளை' தமிழில் மொழிபெயர்த்தார்.
1) சி.வை.தாமோதரம்பிள்ளை
2) தாவீது அடிகளார்
3) பீற்றர் பேர்சிவல் பாதிரியார்
4) மவுண்ட்பேட்டன் பிரபு

8. இசைப்பாடல்களால் அமைந்த வேதம் எது?
1) இருக்கு 2) யசுர்
3) சாமம் 4) அதர்வணம்

9. பத்தாம் திருமுறை எது? அதனை எழுதியவர் யார்?
1) தேவாரம், திருநாவுக்கரசர்
2) கந்தபுராணம், கச்சியப்பர்
3) திருப்புராணம், சேக்கிழார்
4) திருமந்திரம், திருமூலர்

10. அபிராமி அந்தாதியை எழுதியவர் யார்?
1) சோமசுந்தரப் புலவர் 2) சக்திமுற்றப் புலவர்
3) எஸ்.வி.சுப்பையா 4) அபிராமிப்பட்டர்

11. திருக்கோணேஸ்வரப் பதிகம் யாரால் பாடப்பட்டது?
1) திருஞானசம்பந்தர் 2) சுந்தரமூர்த்திநாயனார்
3) கோணேசநாதர் 4) இராவணேசன்

12. 'கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்' என்ற கீர்த்தனையை எழுதியவர் யார்?
1) முத்துசுவாமி தீட்சிதர் 2) அருணாசலக் கவிராயர்
3) வீரமணி ஐயர் 4) இராமலிங்க வள்ளலார்

13. 'மருணீக்கியார்' என்ற பெயரைக் கொண்டிருந்த சமயகுரவர் யார்?
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) மாணிக்கவாசகர் 4) சுந்தரமூர்த்தி நாயனார்

14. இணையற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஜன்ஸ்டீன் கண்டு பிடித்த புகழ்பெற்ற கோட்பாட்டின் பெயர் என்ன?
1) வானவியல் கோட்பாடு 2) சார்பியல் கோட்பாடு
3) அளவையியல் கோட்பாடு 4) காந்தவியல் கோட்பாடு

15. 'சினிமா என் சாதனை, வீணை என் ஆராதனை' எனக் குறிப்பிட்ட திரைப்பட இயக்குநரான இசை மேதை யார்?
1) ஜி.என்.பாலசுப்பிரமணியம் 2) ரவிசங்கர்
3) கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் 4) எஸ்.பாலச்சந்தர்

16. 'லயஞான குபேர பூபதி' பட்டம் பெற்ற தவில் வாத்திய மேதை யார்?
1) வலயப்பட்டி சண்முகசுந்தரம் 2) நடராஜசுந்தரம்
3) தட்சணாமூர்த்தி 4) இணுவில் சின்னராசா

17. யாழ்ப்பாணத்தில் "கலைமகள் சரஸ்வதிக்கு" ஒரு சிறு கோவில் உண்டு. அது அமைந்துள்ள இடம் எது?
1) கீரிமலை 2) கொக்குவில்
3) நல்லூர் 4) அரியாலை

18. அதிகளவில் பக்திப் படங்களை இயக்கி அருட் செல்வர் என்ற பட்டம் பெற்ற இயக்குநர் யார்?
1) கே.பாலச்சந்தர் 2) இராம நாராயணன்
3) பி.மாதவன் 4) ஏ.பி.நாகராஜன்

19. நாரதர், அகத்தியர், இராவணன் மூவரும் ஒரு கலையில் வல்லவர்கள் அக்கலை எது?
1) நாட்டியக்கலை 2) இசைக்கலை
3) சிற்பக்கலை 4) மந்திரக்கலை

20. தினமுரசு தினப்பத்திரிகையாக எப்போதிருந்து வெளிவரத் தொடங்கியது?
1) 2002 ஐப்பசி 01 ஆம் திகதி
2) 2010 ஐப்பசி 01 ஆம் திகதி
3) 1990 மாசி 19 ஆம் திகதி
4) 1993 தை 01 ஆம் திகதி

## நிபந்தனைகள்

- 20 வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு கேள்வியின் கீழும் தரப்பட்டிருக்கும் நான்கு விடைகளில் சரியான விடையின் கீழ் கீறிட வேண்டும்.
- தினமுரசு நாளிதழில் உள்ள இந்தப் படிவத்திலேயே சரியான விடைகளின் கீழ் கீறிட்டு, படிவத்தைக் கத்தரித்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வேறு தாள்களில் எழுதி அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.
- விடைகள் யாவும் இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் அலுவலகத்திலும் அல்லது நல்லூரில் திருவிழாக் காலத்தில் அமைந்திருக்கும் எமது அலுவலகப் பந்தல்களிலும் ஒப்படைக்கலாம்.
- விடைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி **27.08.2011**
- போட்டி முடிவுகள் நல்லூர்த் **தீர்த்தத்திருவிழா** அன்று அறிவிககப்படும். அன்றைய 'தினமுரசு' நாளிதழில் வெளியிடப்படும். பரிசில்கள் பூங்காவனத் திருவிழா (29.08.2011) அன்று வழங்கப்படும்.
- போட்டி தொடர்பான தனிப்பட்ட கடிதத் தொடர்புகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தினமுரசு குடும்பத்தின் ஊழியர்கள் எவரும் போட்டியில் பங்குபற்ற முடியாது.
- தகைமை சார்ந்த தேர்வாளர்களின் தீர்ப்பே இறுதிமுடிவாகும்.

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

தொ.பேசி இலக்கம்: .............................. ..............................

கையொப்பம்

# அரைநீர் மூழ்கி



உலகில் விசித்திரமான ஹோட்டல்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. இப்போது மிகவும் புதுமையான பிரமாண்ட ஆடம்பர அரை நீர்மூழ்கி ஹோட்டல் ஒன்று கட்டாரில் உருவாகிக் கொண்டு இருக்கின்றது. இதன் பெயர்? "Amphibious 1000" இத்தாலி நாட்டின Giancarlo Zema Design Group நிறுவனம் இப்புதுமையான ஹோட்டலை நிர்மாணிக்கின்றது.



ஹோட்டலின் மத்திய கோபுரத்தில் உணவு விடுதி ஒன்று கட்டப்படுகின்றது. 80 அரை நீர்மூழ்கி கட்டடங்களில் விருந்தினர்கள் தங்க வைக்கப்படுவார்கள். இவ்வகை கட்டடங்களுக்கு ஜெலி.:பிஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது. கடலுக்கு அடியில் உள்ள காட்சிகளை இரசிக்கக் கூடிய வகையில் அறைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. மின்சார வாகனங்கள், ஹைட்ரஜன் இயந்திரங்களுடன் கூடிய சிறிய ரக அலுமினிய படகுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியே ஹோட்டல் வளாகத்துக்குள் பிரவே[illegible]க முடியும். ஹோட்டல் நிர்மாணத் திட்டத்துக்கான மொத்தச் செலவு 500 மில்லியன் டொலர் வரை ஆகுமென கணக்கிடப்பட்டுள்ளது.

# கோமா நிலையிலும்


இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பெண்மணி லிசா பாலண்ட் (வயது 31). இவர் கர்ப்பமாக இருந்தார். இந்நிலையில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஸ்வைன் புளூவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

நோய் தீவிரமடைந்ததால் கோமா நிலைக்கு சென்றார். அந்த நிலையிலேயே அவர் குழந்தையை பெற்றெடுத்தார். குழந்தைக்கு சாமுவேல் என பெயரிடப்பட்டது. சாமுவேல் பிறந்து 12 வாரங்களுக்கு பின் லிசா மெதுவாக கண் திறந்து பார்த்துள்ளார். தனது குழந்தையையும் அடையாளம் கண்டார். தற்பொழுது லிசா மற்றும் சாமு வேல் 17 [illegible] வார சிகிச்சைக்கு பின்பு [illegible] நலமாக வீடு திரும்பியுள்ளனர்.




# மூளை இல்லாத குழந்தை

நைஜீரியாவில் லைன் எகிட்டி பொது மருத்துவமனையில் பிரசவத்துக்காக நடுத்தர வயது தாயொருவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவருக்கு மூளை இல்லாமல் தவளையின் முகத் தோற்றத்துடன் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. இந்தத் தகவலை மருத்துவமனை நிர்வாக இயக்குனர் Dr.வோல் ஒலுகோஜி உறுதிப் படுத்தியுள்ளார். மேலும் அவர் இது குறித்து கூறுகையில்.....இவருக்கு பிரசவம் தாமதமானது. அதனால் அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பிரசவிக்கப்பட்டது. பிறக்கும் போது அந்தக் குழந்தை மூளை இல்லாமல் பிறந்துள்ளது. அத்துடன் தலையில் மூ[illegible]ளைக்குப் பதிலாக குழி காணப்பட்டதாக அவர் கூறினார். இந்தக் குழந்தை கருவில் உருவாகும் போதே மூளை உருவாகவில்லை என நிபுணர்கள் கூறியுள்ளனர்.



# வேகமான கார்



உலகில் மிகவும் வேகமாக ஓடக் கூடிய கார் தற்போது விற்பனைக்கு வந்துள்ளது. இதனை டொம் கார்ட்லி நிறுவனம் தயாரித்துள்ளது. டொம் கார்ட்லி நிறுவனத்தின் சொங் நொய்ர் மொடல் காரே உலகில் வேகமான காராக விளங்குகிறது. இந்தக் கார் மணிக்கு 268 மைல் வேகத்தில் செல்லக் கூடியது. 30 கார்கள் மட்டுமே சந்தைக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தக்காரின் விலை 3.43 அமெரிக்க டொலர்களாகும்.

# பாடல்களை இணையத்தில் பகிர்வதற்கு

பாடல்களை கேட்டு ரசிப்பது சுகமானது. பாடல்கள் பற்றி நண்பர்களோடு பேசி மகிழ்வது இன்னும் சுகமானது. இந்த இரண்டையும் சாத்தியமாக்குகிறது அவுட்லவுட் இணையத்தளம். இசைப் பிரியர்கள் எல்லோருக்குமே தங்களுக்கு பிடித்தமான பாடல்கள் பற்றி நண்பர்களோடு பகிர்ந்து கொள்வதும் பிடித்தமானதாக இருக்கும். சில நேரங்களில் வானொலியிலோ, செல்போனிலோ பாடல்களைக் கேட்டு கொண்டிருக்கும் போது நண்பர்கள் அருகே இருந்தால் அவர்களிடம் பாடலின் சிறப்புக்களைச் சொல்லி மகிழும் சூழல் அமையும்.

ஆனால் பல நேரங்களில் பாடல்களைக் கேட்கும்போது பக்கத்தில் நண்பர்கள் இருக்க வாய்ப்பில்லை. இன்னும் சில நேரங்களில் நண்பர்களுடன் மெய்மறந்து இசை பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது குறிப்பிட்ட பாடல்களை கேட்கும் வசதி இல்லாமல் போகலாம்.

இதற்கு மாறாக பாடல்களை நண்பர்களோடு சேர்ந்து கேட்டு இரசித்தபடி அவர்களோடு பாடல்களை விவாதிக்கும் வாய்ப்பை உண்டாக்கித் தருகிறது அவுட்லவுட் இணையத்தளம். அதாவது இணையத்தில் நாம் கேட்கும் அதே பாடலை நண்பர்களையும் கேட்கச்செய்யலாம். அப்படியே அந்தப் பாடல்கள் பற்றிய கருத்துக்களை பரிமாறிக் கொள்ளலாம்.

ஒரே நேரத்தில் நண்பர்கள பாடலை கேட்டு இரசிக்க வசதியாக இந்தத் தளத்தில் உறுப்பினர்கள் தங்களுக்கான இணைய அறையை உருவாக்கி கொள்ளலாம். அதன் பிறகு கைவசம் உள்ள பாடல்களை பதிவேற்றிவிட்டு நண்பகளுக்கு அழைப்பு விடுத்து அவர்களோடு சேர்ந்து பாடல்களை கேட்டு மகிழலாம்.

பாடலின் பிடித்த விடயங்கள் குறித்து கருத்துகளையும் பகிர்ந்து கொள்ளலாம். இந்த உரையாடலின் போது பாடல்களை புதிய கோணத்தில் இரசிப்பது சாத்தியமாகலாம். நண்பர்கள் பரிந்துரைக்கும் புதிய பாடல்களை கேட்டு இரசிக்கலாம். முதல் முறையாக உறுப்பினராகிறவர்கள் புதிய அறையை அமைப்பதற்கு முன்பாக ஏறகனவே உருவாக்கப்பட்டுள்ள பொது அறை யிலும் நுழைந்து பாடல்களை கேட்கலாம். இசைப் பிரியர்களுக்கு சுவாரஸ்யமான சேவை தான்.

கணினி மூலை

**இணையதள முகவரி:-** http://outloud.fm/

# சொக்லேட் ஆடைகள்



பேஷன்கள் பல வகையில் நடைபெறுவதுண்டு. பேஷன் ஷோ பார்ப்பதற்கு அழகாக இருக்கும் பேஷன் ஷோக்களில் ஆடைகள் பல விதமாக இருக்கும்.

ஒவ்வொரு பெண்களும் ஒவ்வொரு ஆடைகளில் வருவார்கள். ஆனால் இங்கே ஒரு பேஷன் ஷோவில் பெண்கள் அணிந்துள்ள ஆடைகள் எல்லாம் சாப்பிடக் கூடிய சொக்லேட் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆடைகளை ஷோ முடிந்த பிறகு கழற்றி மடித்து வைக்கத் தேவையில்லை. சாப்பிட்டே முடித்து விடலாம். சொக்லேட்களைக் கூடி அழகழகான ஆடைகளாக வடிவமைத்திருப்பதுதான் பாராட்டுக்குரியது.

# தூக்குத் தண்டனையை இரத்துச் செய்யுமாறு மனிதச் சங்கிலிப் போராட்டத்திற்கு ஏற்பாடு

(சென்னை)

"தமிழகத்திலும், உலகெங்கும் உள்ள தமிழர்கள், உள்ளம் வேதனைத் தீயால் வெந்து கொண்டு இருக்கின்ற நிலையில், பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூன்று இளந் தமிழர்களுடைய உயிர்களைக் காப்பதற்காகவும், அறிவிக்கப்பட்டுள்ள மரண தண்டனையைத் தடுப்பதற்காகவும், மூன்று தமிழர் உயிர்காக்கும் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் அறிவித்து உள்ளவாறு, நாளை மாலை, தலைநகர் சென்னையில், எம்ஜி.ஆர் நகரில், மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது" என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அனைத்து அரசியல் கட்சிகள், மனித உரிமை அமைப்புகள், தமிழ் உணர்வாளர்களின் அமைப்புகள் ஆகியவற்றின் தலைவர்கள், இக்கூட்டத்தில் பங்குகேற்கிறார்கள். இன்றைய காலகட்டத்தில் நடைபெறுகின்ற இந்த முக்கியமான கூட்டத்தில், நானும் பங்கு ஏற்கிறேன். கழகத் தோழர்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

வருகின்ற 26ஆம் திகதி வெள்ளிக் கிழமை அன்று, மாவட்டத் தலைநகரங்களில் மனிதச் சங்கிலி இணைப்பு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.



வலுவான லோக்பால் சட்டத்தை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வரும் அன்னா ஹசாரேவுக்கு ஆதரவாக ஜம்மு கஷ்மீர் மாநில பல்கலைக்கழக மாணவிகள் ஆர்ப்பாட்டம் நடத்திய வேளை....

## கச்சதீவு ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும்

(சென்னை)

நாகர்கோவில், கச்சதீவு விடயத்தில ஒப்பந்தத்தை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று கம்யூனிட் கட்சியின் ராஜா கூறினார்.

நேற்று நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

நாளைமறுதினம் நாடு தழுவிய அளவில் அனைத்துக் கட்சிகளின் சார்பில் போராட்டம் நடத்தப்படும்.

மேலும், கச்சத்தீவு விவகாரத்தில், இந்தியா செய்துகொண்ட ஒப்பந் தத்தினை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றார்.

# மேற்கு வங்கத்தின் பெயர் பஸ்சிம் பங்காவென மாற்றம்

(புதுடில்லி)

மேற்குவங்கத்தின் பெயரை பஸ்சிம் பங்கா எனப் பெயர் மாற்றம் செய்ய அந்த மாநில அரசும், எதிர்க்கட்சிகளும் ஒருமனதாக முடிவு செய்துள்ளன.

மேற்குவங்க மாநிலத்தின் பெயரை பஸ்சிம் பங்கா என மாற்ற அம்மாநில அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து இனி மேற்கு வங்க மாநிலம் பஸ்சிம் பங்கா என அழைக்கப்படும். மத்திய அரசின் ஒப்புதலுக்குப் பின்னர் இந்தப் பெயர் மாற்றம் அமுலுக்கு வரும்.

மேற்கு வங்கத்தின் பெயர் ஆங்கில அகர 'வரிசைப்படி கடைசி இடத்தில் இருப்பதாகவும், இதனால் அனைத்து விடயங்களிலும் கடைசியாகவே மேற்கு வங்கத்தை அழைக்கிறார்கள் என்றும் புகார்கள் கிளம்பின. இதற்கு முன்பு சில ஆண்டுகளுக்கு முன்பு பாண்டிச்சேரி என்ற பெயர் புதுச்சேரி என மாற்றப்பட்டது. அதேபோல சென்னை, பெங்களூர் உளளிட்ட சில நகரங்களின் பெயர்களும் கூட மாற்றம் கண்டுள்ளன. இந்த வரிசையில் தற்போது மேற்கு வங்க மாநிலத்தின் பெயர் பஸ்சிம் பங்கா என மாறுகிறது.

பஸ்சிம் என்பது வங்க மொழியில் மேற்கு என்று பொருள். அதாவது இது வரை ஆங்கிலத்தில் அழைத்து வந்த பெயரை தற்போது வங்க மொழியில் மாற்றியுள்ளனர்.

எனவே இதுவரை டபிள்யூ என்று ஆரம்பித்த இம்மாநிலத்தின் ஆங்கிலப் பெயர் இனி 'பி' என்ற எழுத்தில் ஆரம்பிக்கும்.

# மருத்துவமனையாகும் தலைமைச் செயலகம்

## வரவேற்கிறார் கருணாநிதி



(சென்னை)

புதிய தலைமைச் செயலக கட்டடத்தை மருத்துவமனையாக மாற்றவுள்ளதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளதை தி.மு.க.தலைவர் கருணாநிதி வரவேற்றுள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணி - மாணவர் அணி சார்பில் சமச்சீர் கல்வி வெற்றி விழா பொதுக்கூட்டம் சென்னை மயிலை மாங்கொல்லையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கூட்டத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி கலந்து கொண்டு பேசும் போது புதிய சட்டமன்ற கட்டடத்தை மருத்துவமனையாக மாற்றுவதாக கூறியிருக்கிறார்கள். நான் கூட என்ன செய்யப்போகிறார்களோ என்று நினைத்தேன்.

அதற்குப் பதில் கிடைத்தது. மக்களுக்கு பயன்படுவதற்காக மருத்துவமனையாக ஆக்கப்போகிறார்கள். மருத்துவமனையாக ஒரு வீட்டை, ஒரு கட்டடத்தை ஆக்குவதில் தவறில்லை.நானே இதற்கு வழிகாட்டியிருக்கிறேன். எனது கோபாலபுர இல்லத்தை எனக்குப் பிறகு மருத்துவமனையாக மாற்ற எழுதிக்கொடுத்துள்ளேன்.

அதனால் புதிய சட்டமன்ற கட்டடத்தை மருத்துவமனையாக மாற்றுவதில் அதிருப்தி எதுவும் இல்லை என்று கூறினார்.

# இலங்கை மீது....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி..)

அம்பாந்தோட்டைத் துறைமுகமானது ஒருபோதும் இராணுவத் துறைமுகமாக மாறமாட்டாது என மே 2011இல் பீஜிங்கில் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருந்தார்.

சீனாவால் நவீனமயப்படுத்தப்பட்ட Gwadar, Chittagong ஆகிய இரு துறைமுகங்களும் வர்த்தக மற்றும் இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன. இவையிரண்டும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விடக் குறைவான கவர்ச்சியைக் கொண்டுள்ளதுடன், கப்பற் பாதையிலிருந்து வெறும் ஐந்து மைல் தொலைவிலேயே அமைந்துள்ளன.

Gwadar துறைமுகத்தை கடற்படைச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துவதற்கான எந்தவொரு திட்டமும் இல்லை எனவும் இது போன்ற எந்தவொரு தளமும் இலங்கையில் இருப்பது தொடர்பாக தான் எதுவும் அறிந்திருக்கவில்லை எனவும் சீன பாதுகாப்பு அமைச்சர் ஜென் லியாங், மே 2011இல் சிங்கப்பூரில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது தெரிவித்திருந்தார்.

'இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுடன் நாம் தற்போது உறவைப் பேணிவருகின்றோம். நாம் சீனாவுடன் நெருக்கமாக உறவைப் பேணிவருவதில் வேறு அச்சுறுத்தல்கள் எதுவுமில்லை' என இலங்கை இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

'அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கான களஞ்சிய மற்றும் எரிபொருள் நிரப்பு வசதிகளை சீனா உருவாக்கித் தருகின்றது; இந்தியாவால் முடியுமா?' என வேறொரு இராஜதந்திரி குறிப்பிட்டுள்ளார்.

சீனாவானது இலங்கையில் பெருமளவான முதலீடுகளை மேற்கொண்டுள்ள ஒரு நாடாகும். 2005இல் ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததிலிருந்து சீனா தன் செல்வாக்கை இலங்கையில் அதிகரித்து வருகின்றது. இலங்கைக்கு பெருந்தொகையான நிதியுதவிகளை மேற்கொண்ட ஜப்பானைவிடத் தற்போது சீனாவானது 3.2 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கையில் முதலிட்டுள்ளது.

2009இல் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நாட்டு முதலீடுகளில் சீனா முதன்மை வகிக்கின்றது. அனைத்துலக கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையில் சீனாவின் யுவான் நாணயம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் இந்தியா தனது கவனத்தை அதிகம் செலுத்தியுள்ளது. அங்கு தற்போதும் இந்தியா முதன்மை நிலையிலுள்ளது.

1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், 'திருகோணமலைத் துறைமுகம் அல்லது இலங்கையிலுள்ள ஏனைய துறைமுகங்கள், இந்தியாவின் நலனிற்கு குந்தகம் விளைவிக்கத்தக்க வேறு நாடுகளின் இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட முடியாது' எனக் குறிப்பிப்பட்டுள்ளது. ஆகவே தற்போது இந்தியாவானது கொழும்பின் வாய் வார்த்தைகளை நம்பிச் செயற்படாமல் அதன் நடவடிக்கைகளுக்கு ஏற்ப செயற்படவேண்டும்.

# இன்று நல்லை ஆதீனத்தில் பீடாரோஹண விழா



சைவமும் தமிழும் தழைத்தோங்க இலங்கையில் ஓர் ஆதீனம் அமைக்க வேண்டும் என்று முற்று முழுதாகப் பாடுபட்டவர் நல்லை ஆதீன ஸ்தாபகர் முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

இவரது விடா முயற்சியால் 1966 ஆம் ஆண்டு நல்லூரிலே ஸ்தாபிக்கப்பெற்ற இந்த ஆதீனம் சைவ சமயம் வளரவும் கலைகள் வளரவும் தம்மாலியன்ற வரை கருமங்களாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இன்று இந்தத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் 45 ஆவது நிறைவு நாளைக் கொண்டாடும் பீடாரோஹண விழா வெகுவிமரிசையாக நடைபெறுகின்றது. கதாப்பிரசங்கம் செய்தே திருத்தொண்டாற்றிய எல்லோராலும் "மணிஜயா" என்று அன்போடு அழைக்கப்பெற்ற நல்லை ஆதீன ஸ்தாபகர் தம்மை முற்றுமுழுதாக சைவப் பணிக்கே அர்ப்பணித்து வாழ்ந்தவர்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் மகோற்சவம் ஆரம்பமாகிவிட்டால் இருபத்தைந்து நாளும் இவரது தொடர் கதாபிரசங்கம் இருக்கும். இவர் ஈழத்தில் மட்டுமல்ல இந்தியா, சிங்கப்பூர், லண்டன் முதலிய இடங்களுக்கும் சென்று கதாப் பிரசங்கம் செய்து தமிழ் வளர்த்திருக்கிறார்.

இலங்கையில் சைவ ஆதீனம் ஒன்று இல்லையே என்னும் குறையை இல்லாது நிவர்த்தி செய்த பெருமையும் இவரையே சாரும். இவர் ஆரம்பித்த இந்த நலலை திருஞானசம்பந்தர் ஆதீனத்தை இப்பொழுது இரண்டாவது குருமஹா சந்நிதானமாக இருக்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சார்ய சுவாமிகள் சிறந்த முறையில் நடத்தி வருகின்றார்.

இவர் யாழ்.குடாநாட்டில் நடைபெறுகின்ற சமய விழாக்களில் அருளாசியுரை வழங்கி வருகின்றார். முன்பெல்லாம் யாழ்ப்பாணத்துக் கோயில்களில் கதாப் பிரசங்கம் என்றால் அது 'மணி ஐயா'வாகத்தான் இருக்கும். அதேபோல இப்போது ஆசியுரை என்றால் அது நல்லை ஆதீன முதல்வராகத்தான் இருக்கும். அந்த அளவுக்கு அவரது சேவை பரந்து விரிந்துள்ளமையை எண்ணும்போது சைவ மக்களுக்கே தனிப்பெருமை அளிக்கிறது.

இன்று நடைபெறுகின்ற பீடாரோகண விழாவில் சுவாமிகளுக்கு விசேட ஆராதனைகள் வழிபாடுகள் ஆசிகள் யாவும் நடைபெற்று நல்லூர் ஆலய வீதியைச் சுற்றி பட்டணப் பிரவேசமும் இடம்பெறுவதும் நமக்குப் பெருமையே.

**சிவநெறிக் கலாநிதி,**
**இராசையா ஸ்ரீதரன்.**

## உலகச் செய்திகள்

# கடாபியின் படையினரால் புதைக்கப்பட்ட 150 பேரின் கல்லறை கண்டுபிடிப்பு

(திரிபோலி)

லிபியாவில் கேணல் கடாபி படை நடத்திய தாக்குதலில் இறந்த 150 பேர் ஒரே இடத்தில் புதைக்கப்பட்ட கல்லறையை போராட்டக்காரர்கள் கண்டுபிடித்துள்ளனர் மிஸ்ரட்டாவில் இருந்து 60 மைல் தொலைவில் தவார்கா என்ற இடத்தில் இந்தக் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டது.

மிஸ்ரட்டாவில் இருந்து கடாபி படையினரால் கடத்தப்பட்டவர்கள் பொது மக்கள் ஆவார்கள். அவர்கள் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் உயிர் இழந்துள்ளனர். இந்த வீடியோ காட்சி ஆதார விவரங்களும் உள்ளன என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். போராட்டக்காரர்கள் தற்போது ஹிஷா நகருக்கு வெளியே உள்ள கடற்சாலையை நோக்கி முன்னேறி உள்ளனர்.

தலைநகர் திரிபோலியில் இருந்து 100 கி.மீ மேற்கே இந்த இடம் அமைந்துள்ளது. எண்ணெய் வளம் மிக்க ஜவல்யா சுத்திகரிப்பு வளாகம் தற்போது போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. திரிபோலிக்கு மேற்கே 30 மைல் தொலைவில் இந்த ஆலை உள்ளது. இங்கிருந்து திரிபோலிக்கு செல்லும் எண்ணெய்க் குழாய் பாதை செவ்வாய்க்கிழமை துண்டிக்கப்பட்டது என போராட்டக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# அதிகளவு தீவிரவாதத் தாக்குதல்களை தெற்காசிய நாடுகளே எதிர்கொள்கின்றன

## - என்கிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

அல்கொய்தா மற்றும் பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டு செயற்படும் லஷ்கர்-இ-தொய்பா போன்ற தீவிரவாத இயக்கங்களின் தாக்குதல்களை தெற்கு ஆசிய நாடுகள் தொடர்ந்து சந்திக்கும் சூழ்நிலையே காணப்படுகிறது.மேலும் அல்கொய்தா தீவிரவாதிகள் தான் 2010 வரை அமெரிக்காவிற்கு மிக அச்சுறுத்தலாகவும், சவாலாகவும் இருந்து வந்துள்ளனர் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகள் மூலம் தீவிரவாதத்தை முனைப்புடன் வேரறுத்துவிட்ட போதிலும் அல்கொய்தா பாகிஸ்தானிலிருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் டெஹ்ரி-இ-தலீபான் மற்றும் சில தீவிரவாத இயக்கங்கள் தங்களுக்குள் தீவிரவாதத் தாக்குதல் நடவடிக்கைகளை இணையம் மூலம் படப்பதிவுக் காட்சிகளையும் சமிக்ஞைகளையும் தொடர்ந்து பரிமாறிக் கொண்டு தான் இருந்து வருகிறது. உதாரணமாக சமீபத்தில் ஒரு வலைத்தளம் மூலமாக ஆங்கிலத்தில் நன்றாக பேசத்தெரிந்த கைதேர்ந்த பாகிஸ்தானைச் சேர்ந்த 5 பேரை தேர்வு செய்து நியூயோர்க் நகரில் கார் வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டது.

2010ஆம் ஆண்டில் 72 நாடுகளில் 11,500 தீவிரவாத தாக்குதல் சம்பவங்களில் சுமார் 13,200 பேர்கள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டு களில் தெற்காசியப் பகுதிகளில் மேலும் பல தீவிரவாதத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என அமெரிக்கா மேலும் தெரிவித்துள்ளது.

# கராச்சி கலவரத்தில் பலியானோர் தொகை 60

(கராச்சி)

கராச்சியில் கடந்த வியாழக்கிழமை நடந்த கலவரத்தில் 11 பேர் கொல்லப்பட்டனர். இதன் மூலம் அங்கு நடைபெற்று வரும் கலவரத்தில் பலியானோர் எண்ணிக்கை 60ஆக உயர்ந்துள்ளது. பாகிஸ்தானின் வர்த்தகத் தலைநகராகக் கருதப்படும் கராச்சி நகரில் கடந்த சில மாதங்களாகவே கலவரம் நடைபெற்று வருகிறது.

அரசியல் மற்றும் இன அடிப்படையிலான வேறுபாடுகளால் வியாழக்கிழமை நடந்த கலவரத்தில் 11 பேர் பலியாயினர். இதுவரை 18 பேரை காணவில்லை என புகார்கள் வந்துள்ளன. முத்தாகிதா குவாமி இயக்கத்தினர் சிந்து மாகாண முதல்வர் இல்லத்தை முற்றுகையிட்டதுடன் கலவரங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் கலவரக்காரர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.


பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி ஸர்தாரி இஸ்லாமாபாத்தில் அதிகாரிகளின் உயர் மட்டக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார். இந்த வருடம் மட்டும் கராச்சியில் நடைபெற்ற கலவரங்களில் 1200 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் பேருந்து கவிழ்ந்ததில் 34 பயணிகள் சம்பவ இடத்தில் உயிரிழப்பு

(கந்தகார்)

ஆப்கானில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் 34 பேர் உயிரிழந்ததுடன் மேலும் 24பேர் காயமடைந்தனர்.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் தலைநகர் காபூலில் இருந்து கந்தகார் புறநகர்ப் பகுதிக்குச் சென்ற பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வீதி வழியே தாறுமாறாக ஓடியது இவ்வாறு ஓடிய பேருந்து சந்தியொனறில் திரும்பியவேளை சரிந்துநொருங்கியது. இதன் போது மேற்படி அனர்த்தம் நிகழ்ந்தது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த அனைவரும் கந்தகார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில்



பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதுடன், உயிரிழந்தோர் தொகை மேலும் அதிகரிக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜப்பான் மக்களின் நேர்மை

(டோக்கியோ)

ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்ட பகுதியில் இருந்து எடுக்கப் பட்ட 350 கோடி ருபா பணம் மற்றும் நகைகளை பொதுமக்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஜப்பானில் புகுஷிமா பகுதியில் கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி ஜப்பானில் பூகம்பமும், அதைத் தொடர்ந்து சுனாமியும் ஏற்பட்டது. இதில் 20 ஆயிரம் பேர் பலியானார்கள். பல இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர். புகுஷிமா அணு



உலையில் இருந்து கதிர்வீச்சு வெளியானது. பூகம்பம் பாதித்த பகுதியில் கடந்த 5 மாதங்களாக சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதில் ஏராளமானவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். பொதுவாக ஜப்பான் மக்கள் நல்ல உழைப்பாளிகள், திறமையானவர்கள், நேர்மையானவர்கள் என பெயரெடுத்துள்ளனர். அவர்களின் நேர்மை சமீபத்தில் வெளியாகி உள்ளது. பூகம்பம் மற்றும் சுனாமி பாதித்த புகுஷிமா கடற்கரைப் பகுதியில் நடைப்பயிற்சி செல்லும் மக்கள் இடிபாடு பகுதிகளையும் கவனிக்க தவறுவதில்லை. அவ்வாறு நடைப் பயிற்சி செல்பவர்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்கள் பூகம்பத்தில் இடிந்து கிடக்கும் வீடுகள் மற்றும் கட்டடங்களின் இடிபாடுகளில் கிடந்த பணத்தை, மீட்டு போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். அதன்படி நேற்றுவரை ரூ.350 கோடி பணம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவை தவிர தங்க நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களையும் கண்டெடுத்துக் கொடுத்துள்ளனர். அவர்களின் நேர்மை பாராட்டுக்குரியது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்

# பதிவிறக்கப் பெட்டகம்

பொதுவாக ஐரோப்பிய–அமெரிக்க புனைகதை எழுத்தாளர்களில் பலர் இயற்கையை அழிவுசக்தியாகவும் மனிதனுக்கு எதிரான அறைகூவலாகவும் தொடர்ந்து சித்தரிப்பவர்கள், இவற்றிலிருந்து ஹொலிவுட் சினிமாக்கள் உருவாகின. தீங்கற்ற கடற்காக்கைகளை நாசகாரச்சக்தியாகச் சித்தரித்த அல்ஃப்ரட் ஹிட்ச்கொக் அதன் முன்னுதாரணம். இன்றுவரை அனகோண்டா, ராட்சத முதலை என்றெல்லாம் ஹொலிவுட் அந்தக் கதையை மீண்டும் மீண்டும் சொல்லி இளம் மனங்களில் இயற்கையை வெறுக்கக் கற்றுத்தருகிறது.

**– ஜெயமோகன்.**

ஹிட்ச்கொக் படத்தைப் பொறுத்தவரை, இந்தக் கருத்தில் எனக்குத் திருப்தியில்லை. படத்தில் கடற்காக்கைகளோ வேறாகின்றன. சிலவேளை சாந்தம், சிலவேளை மௌனம், சிலவேளை சீற்றம். கடற்காக்கைகளின் தாக்குதல் நடக்கு முன்பு கூண்டிலடைத்த காதற்பறவைகளை வாங்கிக்கொண்டு செல்கிறாள், படத்தின் பிரதான பாத்திரமான பெண்மணி. பொதுவாக, பறவைகள் மனிதர்களைத் தாக்கும்வரை பெரிய முரண்பாடு ஏதுமில்லை. தாக்குதலின்போது அந்தக் கூண்டும் மனிதர்கள் பயந்து ஒடுங்கும் கூடுபோலான வீடும் அடுத்தடுத்து காட்சியாவதைப் படம் பார்க்கும் யாரும் கவனிக்காமல் இருக்க முடியாது. படத்தில் பறவைகள் சாந்தமாகவும் பிறகு சீற்றங்கொண்டும் வருகின்றன. இவற்றில் ஒன்று மிகும்போது அடுத்தது வருகிறது. படம் பார்த்தலின் ஊடே கூடுவது பறவைகளின் மர்மம், உயிரினத்தின் மர்மம், அதன் மூலம் மனித இனத்தின் மர்மம், உயிரின் மர்மம். இதற்கு ஹிட்ச்கொக் நேரடியாகப் பதில் கூறுவதில்லை. அவரிடம் பதிலில்லை. ஏன் யாரிடமும் பதிலில்லை! மாறாக, படம் பார்க்கும் உங்கள் அகத்தே இந்தக் கேள்வியைத் தைத்து விடுகிறார் ஹிட்ச்கொக்.

ஹிட்ச்கொக்கின் படத்தை, மனிதர்களை அன்றிப் பறவைகளை நாயகர்களாக வைத்துப் பார்க்க வேண்டும்.

**– நாகார்ஜ/னன்**

தன்னைத் தவிர்த்து, சுற்றிலுமுள்ள பிற அனைத்தையும் எதிர்மறையாகவே காணும் மேற்கத்திய மனோபாவத்தின் வெளிப்பாடு அத்திரைக்கதை. மனிதனின் நுகர்விற்கும், இன்பத்திற்கும், ஆளுகைக்காகவுமே பிற உயிர்களும், இயற்கையும் படைக்கப்பட்டுள்ளன என்ற அசட்டு ஆதிக்க குணத்தின் காரணமாகவே வெள்ளையர் இப்புவியின் சூழல் அழிவுக்குப் பல நூற்றாண்டுகளாக, பல வகைகளிலும் காரணமாக இருந்தனர். இன்று அவர்களே உருத்திராட்சப் பூனைகளாக மாறி நம்மைப் பார்த்துச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி உபதேசித்து வருகின்றனர். இதற்கு மாறாக, தொன்மங்கள், சடங்குகள், பாரம்பரிய நம்பிக்கைகள், வாய்மொழிக் கதைகள், பாடல்கள் இவற்றின் வாயிலாக வெளிப்படும் நம்முடைய கீழைத்தேய ஞானமோ, மனிதன் மட்டுமன்றி அனைத்து உயிர்களும் இயற்கையுடன் ஒத்திசைந்து வாழும் ஒரு முறைமையையே முன்வைத்துப் பேசுகிறது. சூழலை ஆதிக்கம் செய்வதற்குப் பதிலாக அதனுடன் அரவணைத்துச் செல்வது பற்றியே நம் மூதாதையர்கள் சிந்தித்தார்கள்.

**– க. மோகனரங்கன்**

சமீபத்தில் வெளியாகியிருக்கும் 'The Rise of the Planet of the Apes' படத்தின் கதை இதுதான்: சிம்பன்சிகள் மீது செய்யப்படும் ஆராய்ச்சியால் அது மனித குலத்திற்கிணையான அறிவை பெறுகிறது. தன் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கு அடங்க மறுத்து அது ஒட்டுமொத்த மனித குலத்தையும் அழிக்க முற்படுகிறது.

"நாம் நம்மைவிட பரிணாம வளர்ச்சி குறைவாக உள்ள ஒரு மிருகத்தை மேம்படுத்துவதனால் அது நமக்கு ஆபத்தை விளைவிக்கும்", என்ற பயம் மேற்கத்திய கலாசாரத்தில் திரும்பத் திரும்ப பார்க்கக் கிடைக்கும் ஒன்று. 'Frankenstein Fear' என்று இதைச் சொல்வார்கள். கொஞ்சம் கவனித்தால் கூட போதும், இந்தப் படத்தின் உளவியலை 'Frankenstein Fear' பாதித்திருப்பதை உணரலாம். மேலும், இந்தப் படம் பல பத்து ஆண்டுகளுக்கு முன் இதே தலைப்புடன் வெளியான பிரபல ஆங்கிலப் படத்தின் மறுஆக்கமே. ஆக, மேற்கத்திய கலாசாரத்தில் இந்த பயம் மிக வலுவாக ஊன்றியுள்ளது என்று கருத இடமுண்டு.

ஆனால், இத்தகைய ஆராய்ச்சி தற்காலத்தில் உண்மையில் நடைபெறுகிறதா?

ஆம்.

இதனால் நமக்கேதும் ஆபத்துண்டா?

உடனடியாக அப்படி ஒன்றும் நடக்காது.

பொதுவாக நமக்கெல்லாம் இத்தகைய கேள்விகளும் அதன் விடையையும் தாண்டி இன்னொரு கேள்வி ஒன்றையும் விஞ்ஞானிகள் எழுப்புகின்றனர். இத்தகைய ஆராய்ச்சிகளால் நாம் ஏதும் அற மீறல்களை நிகழ்த்துகிறோமா? இதுவே மனிதகுலம் பதில்காண வேண்டிய கேள்வி.

# தருஸ்மான் அறிக்கையைப் பற்றிய உண்மைகள்




எங்கள் ஓய்வுபெற்ற தொழில்முறையாளர்களையும் மற்றும் புத்திஜீவிகளையும் குறைந்தளவு வேறுபாட்டுடன் புகழ் வீரர்களாக நடத்துவது ஒரு ஊடகப் பழக்கமாகிவிட்டது, ஒன்றில் அறியாமையினாலோ அல்லது தெரிவு செய்வதை தவிர்க்கும் காரணமாகவோ. மார்கா நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆய்வரங்கில் இன்றைய நாட்களில் பளிங்குபோல் தெளிவாகப் பளிச்சிடும் அழுத்தமான பிரச்சினையான தருஸ்மான் அறிக்கை அல்லது மிகச்சரியாகக் கூறுவதானால் ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகத்தின் ஆலோசனைக் குழுவினரின் அறிக்கை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

மிகவும் மோசமானது என்னவெனில எங்கள் ஊடகங்களும், கருத்துரையாளர்களும் இலங்கையின் அனுபவமிக்க பழமையான புத்திஜீவிகளில் வடித்தெடுக்கப்பட்ட ஒருவரும், மிகவும் வேறுபட்ட அரச சேவை உத்தியோகத்தரும், உலகிலேயே மிகவும் மதிப்பு வாய்ந்த மிகச்சில புத்திசாலிகளில் ஒருவர் எனக் கருதப்படும் கொட்பிறே குணதிலகவினால் மேற்கொள்ளப்பட்ட தருஸ்மன் அறிக்கையின் விரிவான பகுப்பாய்வை அறியவில்லை போலத் தெரிகிறது.

'இலங்கையில் நடந்த போரின் இறுதிக்கட்டங்களின் உண்மையும் பொறுபபுக்கூறுதலும்' என்கிற தலைப்பிலும், இலங்கையின் பொறுப்புக்கூறுதலைப் பற்றிய ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கையின் பகுப்பாய்வும் மற்றும் பரிணாமமும் எனும் உபதலைப்பிலும் ஒரு ஆய்வுக் கட்டுரையினை அவர் மார்கா நிறுவனம் 21.07.2011 ல் ஏற்பாடு செய்திருந்த ஆய்வரங்குக்காகத் தயாரித்திருந்தார்.

ஊடகங்கள் சாதாரணமாக இதை தவற விட்டுவிட்டதாகவே கருதிக்கொள்வோம். நான் ஆவலோடு காத்திருந்தது இந்தச் செய்தி பற்றிய பிரசுரத்துக்கும் மற்றும் வரும் வாரங்களில் அதைப பற்றிய கடுமையான வர்ணனைகளும் உரக்கப் பேசப்பட்டு, ஜீரணமாகி பிரதிபலிப்பை ஏற்படுத்துவதற்கு போதுமான நேரத்தை வழங்க வேண்டும் என்பதற்காகவுமே.

அத்தகைய முன்னேற்றங்களுக்காக நான் விசேட ஆர்வத்தோடு காத்திருந்தது ஏனென்றால் கொட்பிறே குணதிலகவினால் பரிணாமத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் தருஸ்மான் அறிக்கை, இலங்கை அரசாங்கத்தையும் ஆயுதப்படையினரையும் விமர்சிக்கும் அதேவேளை அவரது வைரமணியினைப் போன்ற முக்கிய நுண்ணறிவு, சுத்திகரிக்கப்பட்ட வழிமுறைகள், மற்றும் தாராளவாத மனிதநேய நன்னெறிகள் போன்றவற்றுடனான சரியான ஒத்திசைவுள்ள நிரூபணத்தை தயார்ப்படுத்தி, மேற்கு, சர்வதேச தொண்டு நிறுவனங்களைத் தளமாகக் கொண்டியங்கும் உலக குடியியல் சமூகம், புலம பெயர் தமிழ் சமூகம், மற்றும் கொழும்பில் உள்ள மேல்தட்டு நாகரிக வலையமைப்புகள் என்பன இலங்கையின் மீது நடத்தும் தாராளவாத மனிதநேய மற்றும் மனித உரிமைகள் பற்றிய பேச்சுக்களின் அடிவேரை நறுக்கித் தள்ளிவிடும் என்பதற்காகவுமே.

இதில் எனக்குத் தோன்றுவது, கலைக்களஞ்சியத்தைப் போல படிப்பறிவும் மற்றும் அறிவார்ந்த திருவுருவுமாக எழுந்து நிற்கும் கொட்பிறே குணதிலக போன்ற ஒருவரது நேர்மை, மதிப்பு, மற்றும் நீதியான தீர்ப்பு வழங்கல் எனபன ஒருபோதும் கேள்விக்கு இலக்காவதில்லை, ஆனால் ஒரு போரை மதிப்பீடு செய்யும்போது அறிவுள்ள ஒரு தந்திரசாலி (ஒப்பீட்டுக்காக) பகிரங்கமாக இலங்கை அரசுக்கு ஒழுக்கவியல போதனை செய்வதைப் போன்று முற்றிலும் வேறுபடுகிறது.

யுத்தத்தில் சிக்கலான மையப் பிரச்சினைகளான, யுத்தக்குற்றங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற வரலாற்று வரையறை மீது சட்டபூர்வ அரச அதிகாரம் ஆதரவு வழங்குதலைப் பற்றிய அவருடைய கருத்து குறிப்பாக ஒரு ஊடுருவும் புறநிலைக் கண்ணோட்டத்தில் உள்ளது. கொட்பிறியின் முடிவுகளிலிருந்து இதோ சில பகுதிகள்:

"அறிக்கையில் உள்ள பிரச்சினைகளின் அடிவேர் தாங்கியிருப்பது, அரசாங்கத்தின் இராணுவ மூலோபாயம் வடிவமைக்கப்பட்டது எந்தவித மனிதாபிமான நோக்கமுமின்றி தமிழர்களை பூண்டோடு அழிக்கும் நோக்கத்திலா அல்லது பணயக்கைதிகளைக் காப்பாற்றும் முயற்சியிலா என்பதில்தான். இந்த விளக்கத்தின் மூலமாக குழுவானது தனது அரைக்கண் பார்வையினூடாக அரசாங்க முயற்சிகளை உருக்குலைக்கத்தக்கவாறு தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த அறிக்கை மேலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி வேண்டுமென்றே இந்த நடவடிக்கைகள் சம்பந்தமாக வழங்கப்பட்ட மிகவும் வித்தியாசமானதும் சரியானதுமான விளக்கங்களை நீக்கிவிட்டு மட்டுப்படுத்தப்பட்ட கருத்துக்களை கொடுத்துள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை விபரிக்கும் ஒவ்வொரு பகுதியிலும் இந்தக் குறைபாடு காணப்படுகிறது" (முடிவுகள், பக்கங்கள் 28 - 29).

"....எல்.ரீ.ரீ.ஈ யினர் வேண்டுமென்றே தங்கள் இராணுவ முயற்சிகளுக்கு பொதுமக்களை ஒன்றுகூட்டியதுடன் தாக்குதலற்ற வலயங்களையும் யுத்தகளமாக்கினார்கள். தாக்குதலற்ற வலயங்களில் பொதுமக்களை போர் முயற்சிகளில் பங்கேற்குமாறு கட்டாயப்படுத்தியதுடன் பொதுமக்களைப் பலவந்தமாகச் சேர்த்து தங்கள் பாதுகாப்பு அரண்களை பலப்படுத்தியதுடன், மற்றும் சண்டைக்குத் தேவையான சகலதையும் அவர்களைக் கொண்டு செய்வித்தனர். பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை எல்.ரீ.ரீ.ஈ வெகு திறமையாக மங்கிப்போக வைத்தது. இராணுவத்தினரின் நடவடிக்கையின் நோக்கத்தையும் விகிதாசாரத்தையும் இப்படியான ஒரு நிலையில் எவ்வாறு மதிப்பிடபட முடியும்? மேலும் எல்.ரீ.ரீ.ஈ சரணடைய மறுத்தும் வந்தது.

இதிலிருந்து தெளிவாகத் தெரியவருவது, எல்.ரீ.ரீ.ஈ யினைத் தோற்கடிப்பதறகும் மற்றும் பணயக்கைதிகளைக் காபபாற்றுவதற்கும், எல்.ரீ.ரீ.ஈ போராளிகள், கட்டாயப்படுத்திச் சேர்க்கப்பட்ட பொதுமக்கள், படை வீரர்கள் மற்றும் போராளிகள் அல்லாதவர்கள் என பாரிய மனித உயிர்களை விலை கொடுக்க வேண்டியிருந்தது இன்றிமையாத ஒன்றாக இருந்தது என்பதே.

இந்தக்கட்டத்தில் இராணுவம் தனக்கு கிடைத்திருக்கும் தெரிவுகளையும் ஏற்படப்போகும் பின்விளைவுகளையும் எடைபோட்டுப் பார்த்து, வெளிப்படையாக அது தாக்குதலை நிறுத்த முடியாது எனவும் மற்றும் முன்னோக்கிச் சென்று எல்.ரீ.ரீ.ஈ யின் எதிர்த்தாககுதலுக்கு விரைவான முடிவு கட்ட வேண்டும் என்றும் முடிவு செய்தது. இதில் குறிப்பிடவேண்டிய ஒரு விடயம், எல்.ரீ.ரீ.ஈ இருந்த விரக்தியான நிலையில் அவர்கள் மிகப் பாரியளவு பொதுமக்களின் மரணங்களை விளைவிக்கக் கூடிய எத்தகைய கொடும்பாதகச் செயல்களையும் நாடக்கூடும் என்பதை அரசாங்கம் கணக்கில் எடுத்திருக்க வேண்டும் என்பதாகும்" (முடிவுகள்: பக்கம் 33).

இந்த இடத்தில் என்னை ஒரு கருத்தினைக் கூற அனுமதியுங்கள். கொட்பிறே குணதிலகவின் புத்திசாதுரியமான விரிவான நுண்ணாய்வு மிக அழகாக அலட்சியம் செய்யப்படும். அயல்நாடு உட்படலான வெளிநாட்டு செய்திப் பிரிவுகள், அதை கண்டுகொள்ளாது. ஊடகங்கள் அதை வெளியிடாது. சமூக ஊடகங்கள் அதை இருட்டடிப்புச் செய்யும். தூதுவர்கள் அதனைக் காணவோ அதன்பக்கம் தமது செவிகளைத் திருப்பவோ மாட்டார்கள். மேதைகள் அதை ஆராயவோ அல்லது வெறுமனே படித்துப் பார்க்கக்கூட மாட்டார்கள். ஆரவார மதக்கொள்கை உடையவர்கள் ஆனால் மனச்சுதந்திரம் குறைவானவர்கள் மற்றும் புத்திஜீவி என்கிற நிலையிலுள்ளவர்கள் போன்ற ஏனைய வெளிச்சங்கள் தொடர்ந்தும் ஒளிவட்டம் வீசுகிற மகான்களாகச் சித்தரிக்கப் படுவார்கள்.

இது ஏனென்றால் அரசியல் ரீதியாக அரச இறையாண்மைக்காக ஒரு போலித் தன்மையான நுட்பமான இகழ்சசியை ஏற்றுக் கொள்வது சரியானதாகும். அதேவேளை மகிந்த ராஜபக்ஷ, கோத்தாபய ராஜபக்ஷ, மற்றும் இலங்கை இராணுவத்தினரின் நடத்தைகள் என்பனவற்றை நோக்கி காட்டும் வெறுப்பினை சிறிது சிறிதாக விட்டுக் கொடுத்து வருவதும் அரசியல் ரீதியாகத் தவறானது. கொட்பிறியின் அத்தகைய ஒரு புறநிலைக் கண்ணோட்டத்தின்படி, மேற்கின் அர்த்தமற்ற காட்சியாக சமீபகாலமாக இடம்பெற்று வரும் ஆட்சி மாற்றத் தூண்டுதலில் நாட்டங்கொண்ட ஒரு சக்திக்கோ அல்லது நாடு கடந்த அரசுக்கோ அதன் எண்ணம் ஈடேற உதவி கிடைக்காது.

கொட்பிறியின் எழுத்துக்கள் கருத்து பூர்வமாகவோ அல்லது உறுதியாகவோ நேரடி விமர்சனத்தில் ஈடுபடவில்லை ஏனெனில் அவை தர்க்க ரீதியாக வெல்ல முடியாத பலம் கொண்டவை. மேலும் குடியியல் சமூகத்தின் விமர்சகர்கள் மட்டுமே போதுமானதாக இல்லை. அதை சிங்கள பௌத்த ஏகாதிபத்திய வாதம் அல்லது புதிய தாராண்மை வாத இராணுவவாதம் எனப் புறம்தள்ளி விட முடியாது. ஏனெனில் கொட்பிறி பௌத்தருமல்ல புதிய தாராண்மைவாதியுமில்லை. அதை ஆட்சியின் ஆதரவாளர் அல்லது அதற்கு ஆசைப்படும் ஒருவருடைய கருத்து என்று ஒரு பக்கமாக ஒதுக்கி வைக்கவும் முடியாது. ஏனெனில் கொட்பிறி அப்படியான ஒரு ஆதரவை ஒருபோதும் விரும்பியதுமில்லை, மற்றும் தனது 85வது வயதில் அந்தப் பழக்கத்தை அவர் பின்பற்றுவார் என்று கற்பனை செய்வது கூடக் கடினம்.

**- தயான் ஜயதிலக**

# இலங்கை மீது சீனாவின் செல்வாக்கு இந்தியாவின் இருப்பைக் குலைக்கும்

வரப்போகும் இந்திய நாடாளுமன்ற விவாதத்தில் இலங்கைத்தமிழர் பிரச்சினை முதன்மைப்படுத்தப்படவுள்ளது. இந்த அமர்வின் போது இலங்கை மீது சீனாவின் செல்வாக்குத் தொடர்பான இந்தியாவின் மூலோபாயம் தொடர்பாகவும் விவாதிக்கப்படவுள்ளது.

அம்பாந்தோட்டை விவகாரம் முக்கியமானதாகும். உப்பளங்களுக்குப் பெயர் போன மற்றும் உலர்ந்த, வெப்பமான காலநிலையைக் கொண்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பிரதான துறைமுகம் ஒன்று அமைக்கப்படுவதற்கான காரணம் என்ன?

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் மாவட்டமாகவுள்ள அம்பாந்தோட்டையை 2025ல் மிகச சிறந்ததோர் கவர்ச்சி மிக்க இடமாக மாற்றுவதென்பது அவரது தொலைநோக்காக உள்ளது.

தரையை ஊடறுத்து அமைக்கப்படும் உலகின் முதலாவது துறைமுகமாக அம்பாந்தோட்டைத் துறைமுகம் அமைந்துள்ளது. சீனாவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் இத்துறைமுகமானது பூகோள ரீதியில் மிக முக்கிய இடத்தில் அமைந்துள்ளது.


அம்பாந்தோட்டை உள்ளடங்கலாக இலங்கை மீது அதிகரிக்கும் சீனாவின் செல்வாக்கை இந்தியா எவ்வாறு விட்டுக்கொடுத்துள்ளது?

**இந்திய அமைதிப்படையின் முன்னாள் தளபதி அசோக்குமார் மேத்தா ஹிந்துஸ்தான் ரைம்ஸில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து...**

இந்தியா மீது தங்கியிருக்கவேண்டிய தேவைப்பாடுகளைக் குறைக்கின்ற ராஜபக்ஷவின் மூலோபாயத் தீர்மானமானது இதில் பெரும் செல்வாக்கைச் செலுத்துகின்றது. குறிப்பாக புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இந்தியாவிடம் பெரிதும் தங்கி வாழவேண்டிய சந்தர்ப்பத்தை ராஜபக்ஷ தனது தந்திரோபாயம் மூலம் குறைத்துவருகிறார்.

'பழைய பட்டுப் பாதையின் முத்து' என்ற நிலைப்பாட்டில் இலங்கை மீண்டும் வரவேண்டும் என்பதையே ராஜபக்ஷ விரும்புகிறார். இந்து சமுத்திரத்தில் நிலவும் இந்தியா மற்றும் அமெரிக்காவின் வர்த்தக, இராஜதந்திர செயற்பாடுகளை முறியடித்து அதில் தனது செல்வாக்கை உயர்த்த வேண்டும் என்பதே சீனாவின் நோக்காகும்.

"இலங்கையில் சீனாவால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புத் தொடர்பாக இந்தியா அச்சபபடத் தேவையில்லை. சீனர்கள் வருவார்கள். போவார்கள். ஆனால் இந்தியர்கள் இங்கே தொடர்ந்தும் தங்கியிருப்பார்கள்" என



ஓகஸ்ட் 2009ல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெளிவுபடுத்தியிருந்தார்.

ஆனால் அம்பாந்தோட்டை விவகாரம் என்பது இந்தியாவின் இருப்பை நிலைகுலையச் செய்வதற்கான செயற்பாடாகும். நிருபமா ராவ் உயர் ஆணையாளராகக் கடமையாற்றிய போது அம்பாந்தோட்டை விவகாரம் முதலில் இந்தியாவிற்குத் தெரியப்படுத்தபபட்டது. செலவு, துறைமுக வளப் பயன்பாடு போன்றவற்றால் அவ்வேண்டுகோள் தட்டிக்கழிக்கப்பட்டது.

சீன நிதியுதவியுடன் நவீனமயப்படுத்தப்பட்டு வரும் கொழும்புத் துறைமுகத்தில் இந்தியாவின் 70 வீதமான கப்பல்களின் நகர்வுகள் கையாளப்படுவதாகவும், அம்பாந்தோட்டையானது சீனாவின் "முத்துக்களின் சரமாக" மாறிவருவதாக 2009ல் இந்து சமுத்திரப் பிராந்தியம் தொடர்பாகக் கருத்துரைத்த போது சிவ்சங்கர் மேனன் தெரிவித்திருந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# அணு ஆயுதப் பயன்பாட்டுக்கு எதிராக உரத்துக் குரல் கொடுக்க வேண்டும்

(கொழும்பு)

அணு ஆயுதப் பயன்பாட்டுக்கு எதிராகவும் அணு ஆயுதங்களைக் களைவது தொடர்பாகவும் இலங்கை அரசு சர்வதேச அளவில் உரத்துக் குரல் கொடுக்க வேண்டிய புறச்சூழல் தோன்றியுள்ளதாக கிறிஸ்டியன் அலையன்ஸ் போர் அக்சன் என்ற அமைப்பு இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

பிராந்திய வலய நாடுகளின் அணுவாயுத பயன்பாடு இலங்கைக்கு ஆபத்தாக அமையக் கூடும் என கிறிஸ்டியன் அலையன்ஸ் போர் அக்ஷன் என்ற அமைப்பு வலியுறுத்தியுள்ளது. இந்தியா, பாகிஸ்தான் போன்ற பிராந்திய வலய நாடுகளில் அணுவாயுதங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் இந்த நடவடிக்கை இலங்கைக்கு பாதக நிலைமையை ஏற்படுத்தக்கூடும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அணுவாயுதங்களைக் களைவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியில் வலுவாக குரல்கொடுக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது என தெரிவித்துள்ளது. ஒரு நாடு அணுவாயுதத்தை பயன்படுத்தினால் உலகின் அரைவாசி அழிந்து விடும் என அமெரிக்காவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

அணுவாயுதங்களைப் பயன்படுத்துவது மனிதாபிமானமற்ற செயல் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உலகில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அணுவாயுத நிலைகள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் அணுவாயுதங்களை பயன்படுத்தினால் அதன் மூலம் இலங்கைக்கு பேராபத்து ஏற்படக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# உயிர்காக்கும் மருந்து விநியோகம் நிறுவனங்கள் மீது அபராதம்

(கொழும்பு)

அரச மருத்துமனைகளுக்கு உரிய தருணத்தில் மருந்து வகைகளை விநியோகிக்க தவறிய நிறுவனங்களிடமிருந்து வருடத்தின் இதுவரையான காலப்பகுதயில் 5 கோடியே 86 இலட்ச ரூபா அபராதம் அறவிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகிறது. தாமதக் கட்டணமாக இந்த தொகை அறவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுகிறார்.

இதேவேளை 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை தரமற்ற மருந்து விநியோகம் காரணமாக 3 கோடி ‘ரூபா நிறுவனங்களிடமிருந்து அறவிட்டுள்ளதாக அமைச்சு தெரிவிக்கிறது. இவ்வாறான மருந்து விநியோக நிறுவனங்களிடமிருந்து அபராதமாக அறவிடவேண்டிய நிலுவைகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கொலை அச்சுறுத்தல் பிலியந்தலையில் இருவர் கைது

(கொழும்பு)

பிலியந்தலை போக்குந்தர பிரதேசத்தில் நபரொருவரிடம் 10 லட்சம் கப்பம் கோரி உயிரச்சுறுத்தல் விடுத்த இரு சந்தேகநபர்கள் கல்கிஸ்ஸை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸை பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்ட விசேட விசாரணையின் மூலம் குறித்த இரு சந்தேகநபர்களும் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பிலியந்தலை மற்றும் ஹோமாகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். சந்தேகநபர்கள் நேற்று கல்கிஸ்ஸை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

## தாதியர் சங்கத்துடன்...

வடமாகாண தாதியர் சங்க இணைப்பாளர் ரட்ணராஜா கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த பணிப் பகிஷ்கரிப்பில் அவசர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் தாதி உத்தியோகத்தர் மட்டுமல்லாது ஏனைய அனைத்து தாதி உத்தியோகத்தர்களும் கலந்துகொள்கிறார்கள். இதில் சிங்கள தாதியர்களும் இணைந்துள்ளனர்.

பணிப்பாளருடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தை திருப்திதரும் பட்சத்தில் பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்படும். எமக்கு சாதகமான தீர்வு கிடைக்காவிடின் பணிப் பகிஷ்கரிப்பை பல நாட்கள் தொடர்ந்து நடத்த தீர்மானித்துள்ளோம் எனக் கூறினார்.

பணிப் பகிஷ்கரிப்பை தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளருடன் தாதியர் சங்கத்தினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதன்போது சத்திர சிகிச்சை நிபுணர் வெளிமாவட்டத்துக்கு சென்றுள்ளதால் திங்கட்கிழமை சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இருவரையும் உடன்பாட்டுக்கு கொண்டுவர ஏற்பாடு செய்வதாகக் கூறினார்.

இதேவேளை, பணிப்பாளரைச் சந்தித்த தாதியர் சங்கப் பிரதிநிதிகள் தங்களுக்கு பணிப்பாளரின் பேச்சு திருப்தியளிக்கவில்லை எனினும் அவசர சிகிச்சைப் பிரிவு நோயாளிகளின் பராமரிப்பினை கவனத்தில் கொண்டு திங்கள் வரை அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினர்.

இன்று வழமைபோன்று பணிதொடருவதாகவும் தினமுரசுக்கு கருத்துத் தெரிவித்தனர். (எப்.எஸ்.பா)

## தொடர்ந்தும் ஆயுதக்...

அமைப்பினை அமெரிக்கா தொடர்ந்தும் பயங்கரவாத இயக்கமாக அறிவித்துள்ளது.

2009ம் ஆண்டில் இலங்கையில் புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிக்கப்பட்ட போதிலும், சர்வதேச வலையமைப்பின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் புலி ஆதரவாளர்கள் தொடர்ந்தும் நிதி உதவிகளை வழங்கி வருவதாகவும், புலிகளுக்கு ஆதரவான சில அறக்கட்டளைகள் நிதி திரட்டல் மற்றும் ஆயுதக் கொள்வனவில் இன்னமும் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இந்தியாவிற்கு தப்பிச் சென்ற சில புலி உறுப்பினர்கள், மீள இயங்கும் முனைப்புக்களை மேற்கொண்டு வருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலிகளின் சட்டவிரோத நிதி கொடுக்கல் வாங்கல்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் பங்களாதேஷ், மலேசியா, பிலிப்பைன்ஸ், நேபாளம், கம்போடியா, ஆப்கானிஸ்தான், தென் கொரியா, இந்தோனேசியா போன்ற நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

பூச்சிநாசினி உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட இளைஞர் சிகிச்சை பயனளிக்காது மரணடைந்துள்ளார்.

சுழிபுரம் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மதியாபரணன் கோகுலதாஸ் (வயது 37) என்பவரே இவ்வாறு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார் எனவும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவரின் சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எஸ்)

## ஆக்கபூர்வமாக....

ஆரம்பித்தது. தற்போது அது பல கட்டங்களைக் கடந்து 5 சுற்று முடிவடைந்த நிலையிலும் இப்பேச்சுவார்த்தையில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் அரசு எடுக்கவில்லை.

மாறாக தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களது பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறு விடயங்களை அரசுக்கு சமர்ப்பித்திருக்கின்றது. எனினும் அரசு இதய சுத்தியுடன் இப்பேச்சுக்களில் ஈடுபடவில்லை.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் ஆக்கபூர்வமான பேச்சுக்களில் ஈடுபடத் தயாராக இருக்கிறோம்.

நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழமுடியாது. அவர்களுக்கு ஆட்சி அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இதன் வெளிப்பாடாகவே நீங்கள் இந்த வெற்றியைப் பெற்றிருக்கின்றீர்கள் எனவும் தெரிவித்த அவர், எதிர்வரும் வாரங்களில் மாற்று வழிகளைப் பற்றி தீர்மானிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (பா)

## கொழும்பில்....

காட்டில் வீசி விட்டு சென்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் அழைக்கப்பட்டு அக்குண்டு வெடிக்கச் செய்யப்பட்டது.



கனடா வாழவைப்போம் அமைப்பின் உதவியுடன் கிளிநொச்சி இரணைமாதா நகரில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# காலத்துடன் மாறும் அகராதி

"retweet", "sexting", and "cyberbullying" இதுபோன்ற 400 புதிய வார்த்தைகள் ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் இடம்பெற்றுள்ளன. அறிவியல் வளர்ச்சியால் புதுப்புது வார்த்தைகளை மக்கள் இப்போது பயன்படுத்தி வருகின்றனர்.

அவற்றையும் சேர்த்து ஒக்ஸ்போர்ட் அகராதி வெளியிடப்பட்டுள்ளது. இதில் கம்ப்யூட்டரில் பயன்படுத்தும் வார்த்தைகள்தான் அதிகமாக சேர்ந்துள்ளன.

குறிப்பாக "retweet" என்ற வார்த்தைக்கு, டிவிட்டர் குறுஞ்செய்திகளை மீண்டும் அனுப்பு அல்லது வேறு ஒருவருக்கு அனுப்பு என்று பொருள் தரப்பட்டுள்ளது. அதேபோல், "sexting" என்ற வார்த்தைக்கு, ஆபாச மெசேஜ் அல்லது படங்களை அனுப்புதல் என்று பொருள் தரப்பட்டுள்ளது.

காலத்துக்கேற்ற வகையில் தன்னை மாற்றிக் கொள்ளும் ஒக்ஸ்போர்ட் அகராதிக்கு ஆங்கில புலமையாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

# தற்கொலை முயற்சி தோல்வி யுவதிக்கு அதிதீவிர சிகிச்சை

(சங்கானை)

வலி மாத்திரை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட யுவதி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் சங்கானை நிச்சாமம் பகுதியில் காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் ரவீந்திரராசா சிந்துகா (வயது 17) என்பவரே இவ்வாறு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)


## கூட்டமைப்பின்...

மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மதத் தலைவர்களது ஆசியுரையைத் தொடர்ந்து உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். சத்தியப்பிரமாணத்தை ஏற்ற த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கையெழுத்திட்டு சான்றிதழ்களை வழங்கினார்.


இந்நிகழ்வில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எஸ்.ஸ்ரீதரன், எம்.ஏ.சுமந்திரன், அ.விநாயகமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், பொன்.செல்வராசா உட்பட மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர்கள் உட்பட பொதுமக்களும் கலந்துகொண்டனர். (பா,எஸ்,எப்.எஸ்)

செய்திப்பரணி

**தேனீரருந்தி கூட்டமைப்பு தேனொழுகப் பேசிப்பேசி**
**போனீராம் வனாந்தரம் புள்ளடிகள் - தானீந்தோர்**
**உங்களது வழமையான உச்சாடன வசனங்களில்**
**தங்களது வாழ்விழத்தல் தரணி!**



# அவுஸ்ரேலிய அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி



(கொழும்பு)


அவுஸ்திரேலிய அணியுடனான 4 ஆவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி நேற்று கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது. நாணய சுழற்சியை வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

களம் இறங்கிய இலங்கை அணி 38.4 ஓவர்களில் 132 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இப்போட்டியில் மஹேல ஜயவர்தன 53 ஓட்டங்களைப் பெற்றார்.

சாமர சில்வா, சமிந்த எரங்க, லிஷித் மாலிங்க மூவரும் ஓட்டமெதுவுமின்றி ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களில் பிரெட் லீ 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் ஷேவியர் டொஹெரத்தி 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

133 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய அவுஸ்திரேலிய அணி 28 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்பிற்கு 133 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது. அவுஸ்திரேலிய அணி சார்பாக ஷானு மார்ஷ் 70 ஓட்டங்களை பெற்றமை

# சத்திர சிகிச்சைகள் இடை நிறுத்தம் நோயாளர்கள் பலர் நிர்க்கதி



(வவுனியா)

## வவுனியா மருத்துவமனையின் அவலம்

வவுனியா அரச மருத்துவமனையில் சகல வகையான சத்திர சிகிச்சைகளையும் இடை நிறுத்திக் கொள்வதற்கு அரசாங்க மருத்துவர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இவ் வைத்தியசாலையில் உள்ள சத்திர சிகிச்சைக் கூடத்துக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தரும் வரையில் தம்மால் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாக மேற்படி சங்கம் அறிவித்துள்ளது.

சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் மருத்துவர்களுக்கு போதியளவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காத காரணத்தினாலும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால், சத்திர சிகிச்சைகளுக்காக வவுனியா செல்லும் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும், வவுனியா வைத்தியசாலை செல்லும் நோயாளிகள் அனுராதபுர வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக அதிகாரிகளை அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## வணிக பீடத்திற்கு புதிய பீடாதிபதி

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பீடாதிபதியாகப் பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். கணக்கியல் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டதோடு தமிழ்த்துறையில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ள பேராசிரியர் தி.வேல்நம்பி அகில இலங்கை அமுத சுரபிக் கலாமன்றத்தின் அமைப்பாளரும் ஆவார்.

# ‘காப்பெற்’ வீதிகளுக்கு வழித்தடக் குறியீடு

யாழ்.மாநகரப் பகுதியில் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்ட வீதிகளுக்கான போக்குவரத்து வழித்தடக் குறியீடுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இடப்பட்டு வருகின்றன.

காப்பெற் வீதியாக மாற்றப்பட்ட பழைய பூங்கா வீதி மற்றும் சென்.ஜோன்ஸ் கல்லூரி முன் பாகவுள்ள வீதிகளுக்கும் வழித்தடக் குறியீடு இடப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் ஏனைய காப் பெற் வீதிகளுக்கும் வழித்தடக் குறியீடுகள் இடப்படவுள்ளன.

வழித்தடக் குறியீடுகள் இல்லாமை காரணமாக அண்மைக் காலமாக பல வீதி விபத்துக்கள் யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அழகு ஆபத்தானது அவதானம் தேவை



(கொழும்பு)

அழகு சாதனப் பொருட்களை உபயோகிக்கும் போது அவை தொடர்பாக அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவுறுத்தலை அழகு சாதன வைத்திய பொருட்கள் மற்றும் ஔடத அதிகாரசபைப் பணிப்பாளர் சரத் ஹேமந்த பெனரகம விடுத்துள்ளார்.

அழகு சாதான பொருட்கள் பயன்படுத்தப்படுகின்ற அழகு சாதன நிலையங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அழகு சாதன நிலையங்களில் பயன்படுத்தப்படுகின்ற அழகு சாதனப்பொருட்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழில் சிறப்புச் சேவை சக்தி எவ்.எம். அழைக்கிறது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு சக்தி எவ்.எம் தனது விசேட சேவையொன்றை யாழ். மண்ணில் நேரடியாக ஒலிபரப்புச் செய்கின்றது. இவ் ஒலிபரப்பு இன்று தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வரை இலக்கம் 44, பருத்தித்துறை வீதியில் (நாவலர் முன் வீதி) அமைக்கப்பட்டுள்ள விசேட கலையகத்தில் இருந்து நிகழ்வுகள் ஒலிபரப்பாகின்றன.

கௌரவ மக்கள் அபிமான சக்தி எவ்.எம்.இன் அன்பான அறிவிப்பாளர்களோடு சக்தியின் நேயர்கள் அனைவரும் இணைந்து கொள்ளுங்கள் என சக்தி எவ்.எம் அழைப்பு விடுக்கின்றது. (எப்.எஸ்)

## “காசுக்கான வேலை” மருதங்கேணியில் ஆரம்பம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் நேற்று உதவி அரசாங்க அதிபர் திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை யாற்றுகையில் 30 வருடகால போரினால் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த இப்பிரதே சத்தை துரித கதியில் அபிவிருத்தி செய்ய நாமும் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் முழு மூச்சுடன் உழைத்து வருகின்றோம். அவ்வாறே இடம்பெயர்ந்து மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் செயற்படுத் தப்படும் இவ்வாறான காசுக்கான வேலைத்திட்டங்கள் மூலம் எமது பிரதேசங்களையும் புனரமைப்புச் செய்ய முடியும் எனவும் குறிப்பிட்டார்.

நிகழ்வில் கருத்துரைகளை பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினரும், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி பிரதேச அமைப்பாளருமான ஸ்ரீரங்கேஸ்வரன் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் அலுவலரான சிவகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழான காசுக்கான வேலைத்திட்டத்தை ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்கள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் மணிதரன் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் அலுவல்கள் கிராம அலுவலர் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## படைவீரர்களுக்கு காலியில் வீடுகள்

(கொழும்பு)

காலி மாவட்டத்தில் நமக்காக நாம் நிதியத்தின் ஊடாக 32 வீடுகள் இராணுவ வீரர்களுக்கு நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கையளிக்கப்பட்டது.

யுத்தக் களத்தில் அங்கவீனமடைந்து மற்றும் தற்போது முப்படையில் கடமையாற்றும் வீரர்களுக்கும் யுத்தத்தின் போது உயிரிழந்த மற்றும் காணாமற் போன இராணுவ வீரர்களின் உறவினர்களுக்கும் இப்புதிய வீடுகள் நிர்மாணித்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின்போது வீடு இராணுவ வீரர்களுக்கு கையளிக்கப்படுவதை அடையாளப்படுத்தும் வகையில் இலங்கை இராணுவத்தின் 5ஆவது கெமுனு படைப் பிரிவைச் சேர்ந்த கோப்ரல் குணசேகரவுக்கு காலி அக்மீமன கப்புஹேன்பல பகுதியில் கட்டப்பட்ட வீடு ஜனாதிபதியால் கையளிக்கப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## கொக்காவிலில் விபத்து பெண்கள் உட்பட மூவர் காயம்

(கிளிநொச்சி)

கொக்காவில் பகுதியில் பிக்கப் ஒன்றும் கனரக வாகனும் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயங் களுக்குள்ளான சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.45 மணியளவில் இடம் பெற்றது. இவ்விபத்தில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பிக்கப் வாகனமே விபத்தில் சிக்கியது.

இச்சம்பவத்தில் சாரதி உட்பட பயணித்த இரு பெண்கள் படுகாயமடைந் தனர். நவாலிப் பகுதியைச் சேர்ந்த ஜெஸ்ரினா (வயது-28), மதுஷா (வயது-27) வாகனச் சாரதி சஞ்ஜெயந் (வயது-25) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிகப்பட்டுள்ளனர். (எஸ்)

## நாட்டின் தேசிய மலர் தாய்த்தாவரம் அருகி வருகிறதா?

### தாவரவியல் நிபுணர்கள் அபாயமணி



இலங்கையின் தேசிய மலரான நீலோற்பவத்தின் தாவர இனம் அருகிச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டுக்குறிய ஒரு வகைத் தாவரத்துடன் சேர்த்து இந்தத் தாவர இனம் வளர்வதே இதற்கு காரணம் எனப் பேராதனை பல்கலைக்கழகத்தின் தாவரவியல் பிரிவின் பேராசிரியர் தீப்தி யகன்தாவல உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. குளியாப்பிட்டி, அனுராதபுரம், களுத்துறை, ஆனவிலுந்தாவ, உள்ளிட்ட பிரதேசங்களில் இந்த தாவர இனங்கள் கலந்து வளர்கின்றமை கண்காணிக்கப்பட்டதாக பேராசிரியர் தீப்தி யகன் தவால குறிப்பிட்டார்.

நாட்டிற்கே உரித்தான செடி வகையொன்று இவ்வாறு சேர்க்கைக்குள்ளானமை கண்டறியப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என பேராசிரியர் கூறினார். உயிர்ப் பல்வகைத்துவ செயலாளர் அலுவலகத்திடம் இது தொடர்பில் வினவியபோது இத்தகைய சேர்க்கை தொடர்பில் தமக்கு தகவல்கள் பதிவாக வில்லை என அதன் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

# இலங்கை - பாகிஸ்தான் பரஸ்பர சந்தை வாய்ப்பு



(கொழும்பு)

2005 ஆம் ஆண்டின் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இணக்கம் காணப்பட்ட 6000 தொன் பாஸ்மதி அரசி இறக்குமதிக்கான கோட்டாவை 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கை தனியாருக்கு வழங்கவுள்ளது.

இதேபோல் பாகிஸ்தானும் இலங்கையின் வெற்றிலை இறக்குமதிக்கு இதேயளவு போட்டித்தன்மையான சந்தைவாய்ப்பை, தற்போதைய முன்னுரிமை விளிம்பை மீளமைப்பதன் மூலம் வழங்கும்.

இரு தரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக கடந்த 18 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற இலங்கை பாகிஸ்தானுக்கிடையிலான செயலாளர் மட்ட பேச்சுவார்த்தையின்போது இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் இலத்திரனியல் பொருட்களுக்கு சலுகை அடிப்படையிலான சந்தைவாய்ப்பை வழங்குவது குறித்து பரிசீலிக்கவுள்ளதுடன் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படு கைவினைப் பொருட்களுக்கு இத்தகைய சந்தை வாய்ப்பை வழங்குவது குறித்தும் ஆராயப்படவுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒகஸ்ட் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.